தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு

முற்றம்

₹10/- மலர் 15 இதழ் 9 ஜனவரி 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர்

வாழ்விலும் வளர்ச்சியிலும்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டரை ஆண்டு சாதனைகள்

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

மாதந்தோறும் உங்களை முற்றம் இதழ் வாயிலாக சந்திப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. புத்தாண்டை உற்சாகத்துடன் வரவேற்ற நீங்கள், பொங்கல் திருநாளையும் கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள். பகிர்ந்து கொள்ளப்படும் மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது என்பார்கள். நானும் அதை நினைவில் கொண்டு உங்களுடன் எனது மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறேன். சென்ற நாட்களில் பெற்ற அனுபவங்களை பாடமாகக் கொண்டு, எதிர்வரும் நாட்களில் ஆற்ற வேண்டிய செயல்களுக்கு வடிவம் கொடுக்க நீங்கள் என்றும் தயாராக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெண்கள் பொருளாதார முன்னேற்றம் பெற வேண்டும் என்று உன்னத நோக்கத்துடன் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் பலவற்றை தீட்டி வருகிறார். உங்களின் வளர்ச்சிக்காக, நீங்கள் பொருளாதார உயர்வு பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை சிந்தாது சிதறாது உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும் உயரிய பணியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், புதுவாழ்வு திட்டம் போன்றவை அயராது மேற்கொண்டு வருகின்றன என்பதும் நீங்கள் அறிந்ததுதான்.

நீங்கள் பொருளாதார உயர்வு பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீட்டும் திட்டங்களை சிந்தாது சிதறாது உங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும் உயரிய பணியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், புதுவாழ்வு திட்டம் போன்றவை அயராது மேற்கொண்டு வருகின்றன என்பதும் நீங்கள் அறிந்ததுதான்.

சிதறிக் கிடக்கும் பெண்களை ஒன்றிணைத்து குழுவாக அமைத்தல், பயிற்சிகள் பல தந்து தொழில் முனைவோராக உயர்த்துதல், அவர்கள் தயாரித்த பொருட்களுக்கு தனித்தன்மை பெற்றுத் தந்து நியாயமான விலை கிடைக்கச் செய்தல், கூட்டமைப்புகளாக உருவாக்கி அவர்களின் ஒற்றுமைக்கு அடித்தளமிடுதல் போன்ற செயல்பாடுகளில் மகளிர் திட்டம் ஈடுபட்டு அதில் வெற்றியையும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை 2023 ஆகியவை வெற்றி பெற அயராது பாடுபடும் சுய உதவிக்குழு இயக்கத்தைச் சேர்ந்தவர்களை உலகே பாராட்டுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வங்கி முகவர்களாக, கல்வி அறிவு வழங்குபவர்களாக, சமூக அநீதிகளைக் களையும் வீராங்கனைகளாக சுய உதவிக் குழு மகளிரை உருவாக்க ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்ற செய்தி உங்களுடைய வெற்றிக்கு கிடைத்த பரிசாகும்.

பெண்களென்றாலே ஏளனமாகப் பார்த்தவர்கள் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு தடைகள் பல கடந்து, வெற்றிகளைப் பெற்று வரும் நீங்கள், எதையும் சாதிக்கும் திறன் படைத்தவர்கள். உங்களுடன் கைகோர்த்து செல்ல, உங்களுடன் சேர்ந்து பயணிக்க, தடைகளைத் தகர்க்க உங்களுக்கு தோள் கொடுக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும் எப்போதும் உறுதுணையாக நிற்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்

சர்க்கரை நோய்க்கு
இந்த நாட்டாமையோட தீர்ப்பு இதுதான்!

சர்க்கரை நோயை தவிர்க்க

- 30 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் அரசு மருத்துவமனை (அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் சர்க்கரை நோய் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்
- அதிகமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்கொள்ள வேண்டும்
- அதிக கொழுப்பு மற்றும் சர்க்கரை உள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும்
- நாள்தோறும் அரை மணி நேரமாவது நடக்க வேண்டும்
- புகை மற்றும் மது பழக்கத்தை விட்டு விட வேண்டும்
- ஆரம்ப நிலையிலேயே சர்க்கரை நோயை கண்டறிந்து தகுந்த சிகிச்சை எடுத்துக்கொண்டால் கண், சிறுநீரகம், இதயம், நரம்பு பாதம் போன்ற உறுப்புகள் பாதிப்படைவதை தவிர்க்கலாம்

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 15 இதழ் 09 ஜனவரி 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. ராதா
கூடுதல் இயக்குநர்

ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

புகையிலையா? வேப்பிலையா?

வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று, தமிழகத்தில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுக்களை பார்வையிட வந்திருந்தனர். அவர்களோடு கலந்துரையாடிவிட்டு, மதிய உணவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. உணவு பரிமாறும் போது அந்த அதிகாரிகள் ஒரு வேண்டுகோளை வைத்தனர். அதாவது அவர்கள் தங்கியிருக்கும் நாட்களில் அவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு மற்றும் இரவு உணவில் கட்டாயமாக வேப்பிலை வறுவல் தவறாமல் பரிமாறுமாறு கேட்டுக் கொண்டனர்.

நான் வியப்புடன் அதற்கான காரணத்தைக் கேட்ட போது, அவர்கள் சொன்னார்கள், 'கேன்சர் எனப்படும் புற்றுநோய் வராமல் தடுப்பதற்கான குணம் வேப்பிலையில் உள்ளது. அதனால் நாங்கள் வேப்பிலையை தவறாமல் எப்போதும் உணவில் சேர்த்துக் கொள்வோம்' என கூறினர். அவர்கள் சொல்வது அனுபவ அறிவாகவும் இருக்கலாம்.

உயிரைக் குடிக்கும் கொடுமையான புற்றுநோய் உலகளவில் பெரும் சவாலாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் 30% பேர் புற்றுநோயால் மட்டுமே இறக்கின்றனர் என உலக சுகாதார நிறுவனத்தின் செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. எனவேதான், புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. 2020ஆம் ஆண்டுக்குள் புற்றுநோயால் ஏற்படும் மரணத்தை கணிசமான அளவில் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே உலக புற்றுநோய் தினம் அனுசரிப்பதன் நோக்கமாகும்.

புற்றுநோய் ஆங்காங்கே காணப்பட்டாலும், மிக அதிகமாக பெண்கள் மார்பகப் புற்று நோயினாலும், கர்ப்பப்பை புற்றுநோயினாலும் பாதிக்கப்பட்டு வருவதை காண முடிகிறது. 2004ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி ஆண்டுதோறும் 5,19,000 பேர் மார்பக புற்றுநோயினாலும், உலகளவில் 15,00,000 பேர் புற்றுநோயினாலும் இறக்கின்றனர். எனவே, புற்றுநோயினைப் பற்றிய விழிப்புணர்வினை அனைவரும் பெற வேண்டியது அவசியமாகிறது.

எதிர்பாராமல் ஏற்படும் உடல் எடை குறைவு, மிக அதிகமான ஓய்வு எடுத்தல், குறையாத சோர்வு போன்றவை புற்றுநோய்க்கான அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகள் தோன்றும் போதே மருத்துவமனைக்கு சென்று, பரிசோதித்து உடனடியாக சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். புற்றுநோய் வருவதற்கு முன்பே, தடுப்பு முறைகளாக அதிகமாக புகையிலையைப் பயன்படுத்துவது, புகை பிடிப்பது, போதை மருந்துகளை உபயோகப்படுத்துவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும். அதோடு சுறுசுறுப்பாக இருப்பது, உடல், உடை ஆகியவற்றை தூய்மையாக வைத்துக் கொள்வதும் மிக அவசியம்.

புகையிலையை வேப்பிலை வெல்லலாம்!

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

கடிதங்கள்

சுய உதவிக் குழுக்களின் உற்ற தோழியாக முற்றம் இருக்கிறது. குழுக்களின் வெற்றிக் கதைகள், தொழில் வாய்ப்புகள், உடல் நலக் குறிப்புகள், இயற்கை அழகு பெறும் வழிகள், சட்டம் குறித்த செய்திகள், மூலிகைப் பொருட்கள் போன்றவற்றையும் தாங்கி வரும் முற்றம் இதழை நாங்கள் அனைவரும் வாழ்த்துகிறோம்.

உறுப்பினர்கள்
நேரு மகளிர் சுய உதவிக் குழு,
ஆதனூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

கிராமப்புறத்தில் வாழும் மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் மகளிர் மேம்பாட்டு நிறுவனம், புதுவாழ்வு திட்டம், தமிழ்நாடு மாநில வாழ்வாதார இயக்கம், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதார திட்டம் போன்றவற்றின் செயல்பாடுகளையும், வெற்றி பெற்றவர்களின் சுய உதவிக் குழுக்களின் கதைகளையும், அனைவருக்கும் பயனுள்ள செய்திகளையும், தன்னம்பிக்கைக் கட்டுரைகளையும் வெளியிட்டு வரும் முற்றம் இதழுக்கு எங்கள் ஆதரவு என்றும் உண்டு.

குழு உறுப்பினர்கள்,
மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு,
பள்ளிப்பாளையம், நாமக்கல்.

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகிய இரண்டும் ஏழை மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன என்பதை மிகவும் சிறப்பாக வெளியிட்டு வருவது முற்றம் இதழ் மட்டுமே. இளைஞர் தொழிற்திறன் பயிற்சி பெற்றவர்களின் வெற்றிக் கதைகள் ஊக்கமளிப்பதாக இருக்கின்றன. பெண்களுக்கு பயனுள்ள செய்திகள் இடம் பெற்றிருக்கின்றன. மாதந்தோறும் எங்களை சந்திக்கும் முற்றம் இதழ் மேலும் வளர வேண்டும்.

உறுப்பினர்கள்,
சுதந்திரம் மகளிர் சுய உதவிக் குழு,
வளநாடு, புதுக்கோட்டை மாவட்டம்.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், தங்கள் பகுதியில் நடைபெறும் சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

இப்படிக்கு

உள்ளே...

புற்றுநோய் விழிப்புணர்வு தினம் பக்கம்...5

வெற்றிப் பாதைக்கு வழிகாட்டி பக்கம்...7

மாற்றம் தந்த மகளிர் மேளா பக்கம்...8

கால்நடைகளுக்கு காப்பீடு பக்கம்...12

பொங்கல் வாழ்த்து பக்கம்...17

பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பு பக்கம்...29

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org

சென்னையில் 20 நாடுகள் பங்கு பெறும் உலக அளவிலான கபடி போட்டி நடத்த ரூ. 1 கோடி மானியம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை

தமிழகத்தில், குறிப்பாக கிராம மக்களிடையே பிரபலமான விளையாட்டு கபடியாகும். இந்த விளையாட்டுக்கான உலக அளவிலான போட்டிகள் சென்னை மாநகரில் வரும் 2014ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற உள்ளது. இந்த போட்டிகளில் இந்தியா, மெக்ஸிகோ, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், தென்கொரியா, வியட்நாம், ஆப்கானிஸ்தான், நேபாளம், ஈரான், பாகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், வங்காளதேசம், தாய்லாந்து, மலேசியா, சைனீஸ் தைபே, ஆஸ்திரேலியா, கனடா, இத்தாலி மற்றும் மேற்கு இந்திய தீவுகள் ஆகிய 20 நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி அணிகள் கலந்து கொள்கின்றன. சென்னையில் நடக்கும் இப்போட்டிகளை நடத்துவதற்கு அரசு மானியமாக 1 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் மதுரை, திருவண்ணாமலை, கன்னியாகுமரி, விருதுநகர், கடலூர், தஞ்சாவூர், தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய 16 மாவட்டங்களில் உள்ள விளையாட்டரங்கங்கள் என 17 இடங்களில் 1,500 முதல் 2,000 சதுர அடி பரப்பளவில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்க 1 கோடியே 50 லட்சம் ரூபாய், இந்த உடற்பயிற்சிக் கூடங்களுக்கான உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்குவதற்காக 2 கோடியே 55 லட்சம் ரூபாய் என 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ■

உலக அளவிலான கபடிப் போட்டிகள் சென்னை மாநகரில் வரும் 2014ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற உள்ளது. இதில் 20 நாடுகளைச் சேர்ந்த அணிகள் கலந்து கொள்கின்றன.

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ. 2 கோடி நிதியுதவி

சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டி நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் 31.12.2013 அன்று தொடங்கி 05.01.2014 வரை நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய ரூபாய் 2 கோடி நிதியுதவியுடன் நடைபெற்ற இப்போட்டியில் உலகின் முன்னணி வீரர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரான்ஸ் வீரர் ரோஜர் வாசலினும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த வாவ்ரின்காவும் மோதினர். பரபரப்பான ஆட்டத்தில் சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரின்கா வெற்றி பெற்று உலக சாம்பியன் கோப்பையை வென்றார். வாவ்ரின்காவிற்கு சாம்பியன் பட்டத்துடன், ரூ. 45 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்பட்டது. ■

டெல்லியை அசத்திய அம்மா உணவகம்

தமிழகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்ற அம்மா உணவகத்தின் பெருமை தற்போது புதுடெல்லியையும் எட்டியுள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு டெல்லியில் உள்ள தமிழ்நாடு பவனில் தற்காலிகமாக அம்மா உணவகம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த உணவகம் செயல்பட்ட மூன்று நாட்களும் பெருந்திரளான அளவில் டெல்லி மக்கள் வருகை தந்து சுவையான உணவு வகைகளை சாப்பிட்டு சென்றனர். 'தினசரி 10 ரூபாய் இருந்தாலே போதும் வயிறார சாப்பிடலாம்' என்று டெல்லி மக்கள் பாராட்டியது அம்மா உணவகத்திற்கு கிடைத்த பெருமையாகும்.

டெல்லி அம்மா உணவகத்தில் 7,955 இட்லிகள், 3,347 பிளேட் சாம்பார் சாதம், 1,006 பிளேட் பொங்கல் விற்பனை ஆகியுள்ளன. ■

பிப்ரவரி 1

பெண்கள் இதய நல தினம்

இதய நோய் குறித்து பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதே பெண்கள் இதய நல தினத்தின் (Women's Heart Health Day) முக்கிய நோக்கமாக உள்ளது. இதய நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்ட பிறகு இந்த எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும்.

பெண்களின் உடலில் இயற்கையாகவே சுரக்கும் ஈஸ்ட்ரஜன் என்னும் ஹார்மோன், இதய நோய் பாதிப்பு ஏற்படாமல் அவர்களை பெரிதும் காக்கிறது. மெனோபாஸ் எனப்படும் மாதவிடாய் சுழற்சி நின்றபின், ஈஸ்ட்ஜன் சுரப்பதும் நின்று விடுவதால், இதயநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் பெண்களுக்கு இருக்கிறது. எனவே பெண்கள் இதய நோய் குறித்த விழிப்புணர்வை பெறுவது அவசியமாகும். ■

தினம் தினம்

இன்று சாரணியர் இயக்கமும், பெண்கள் சாரணிய இயக்கமும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபடுகின்றன. இவை எதிர்கால சமூகத்திற்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்குகின்றன.

பிப்ரவரி 4

புற்றுநோய் விழிப்புணர்வு தினம்

புற்றுநோயினை பற்றி அறிந்துக் கொண்டு முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆண்டுதோறும் பிப்ரவரி 4ஆம் தேதி 'உலகப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம்' (World Cancer Day) அனுசரிக்கப்பட்டு வருகிறது.

பீடி, சிகரெட், புகையிலை, சுற்றுச்சூழல் மாசு ஆகியவை புற்றுநோய் ஏற்படக் காரணமாக உள்ளன. புற்றுநோய்கள் பெரும்பாலும் வாய், தொண்டைப் பகுதியில் வருகின்றன. பெண்களுக்கு கர்ப்பப்பை, மார்பகம் ஆகிய பகுதிகளை புற்றுநோய் தாக்குகிறது. உலக அளவில் புற்றுநோய் பாதிப்பால் மரணம் அடையும் பெண்களில் அதிக விழுக்காட்டினர் மார்பகப் புற்றுநோயால் இறக்கிறார்கள்.

பிப்ரவரி 22

சாரணர் தினம்

சாரணர் இயக்கம் உலகளவில் செயல்படும் ஓர் இளைஞர் இயக்கமாகும். வாய்மை, நேர்மை, நம்பகத்தன்மை, தேசப்பற்று, நேசம், ஜீவகாருண்யம், மரியாதை. தைரியம் போன்ற ஆளுமை அம்சங்களைக் கொண்ட மனித நேயப்பண்புகளுடன், சேவைகள் மூலம் சமூகத்துடன் ஒன்றிணைந்த அமைப்பாக மிளிரும், 'எதற்கும் தயாராக இரு' எனும் கருப்பொருளைக் கொண்ட சாரணிய இயக்கத்தை உருவாக்கிய பிதாவாகக் கருதப்படும் பேடன் பவல், 1857 பிப்ரவரி 22ம் தேதி பிறந்தார். தென்னாப்பிரிக்காவில் பணியாற்றிய வேளையில், 1907ஆம் ஆண்டில் 22 இளைஞர்களுடன் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தார். 1910ல் சாரணியம் உலகெங்கும் பரவத் தொடங்கியது. தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளில் சாரணர் சங்கங்கள் செயல்படுகின்றன. ■

பிப்ரவரி 28



தேசிய அறிவியல் தினம்

உலகம் போற்றும் வகையில் பல அறிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டவரும், சிறந்த இயற்பியல் மேதையுமான சர். சி. வி. ராமன் தன்னுடைய நோபல் பரிசு பெற்ற ஆராய்ச்சி முடிவை வெளியிட்ட பிப்ரவரி 28ம் தேதி தேசிய அறிவியல் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

உலகின் முதல் பெண் விஞ்ஞானி என்ற பெருமையினைப் பெற்ற மேரி கியூரி அம்மையார், ரேடியம் (Radium) என்ற தனிமத்தினை கண்டுபிடித்தவர். இருமுறை நோபல் பரிசினைப் பெற்ற மேரி கியூரி அம்மையார் ஆராய்ச்சியிலேயே தனது வாழ்நாளினை கழித்தவர். அல்லும் பகலும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வரும் அறிவியல் அறிஞர்களின் அரும்பணியினையும் தேசிய அறிவியல் தினத்தில் நினைவு கூர்வது சிறப்பாகும். ■

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைக்கப்பட்டு தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றன. நம் மாநிலத்தில் சுகாதார வளாகங்களின் சிறப்பான செயல்பாட்டினை அறிந்து தங்கள் மாநிலங்களிலும் சுகாதார வளாகங்களை அமைக்க பிற மாநில அரசுகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நம் மாநிலத்தில் செயல்படும் சுகாதார வளாகங்களை பார்வையிட குஜராத் மாநில அரசு உயர் அலுவலர்களின் குழு ஒன்று 03.01.2014 மற்றும் 04.01.2014 ஆகிய தேதிகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தது. குஜராத் மாநில ஊரக வளர்ச்சித்துறை செயலர் மற்றும் ஆணையர் டாக்டர் வி. திருப்புகழ், இ.ஆ.ப., மற்றும் குஜராத் மாநில நகர்புற (வீட்டுவசதி) வளர்ச்சித்துறை செயலர் திருமதி. மோனா காந்தார், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் வருகை தந்த இக்குழுவினர், 03.01.2014 அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. பிரஜேந்திர நவநீத், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர்கள், உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடினர்.

பின்னர் காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் மற்றும் முடிச்சூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள சுகாதார வளாகங்கள், கழிவு பொருட்களைப் பயன்படுத்தி எரிவாயு தயாரிக்கும் அமைப்புகளை பார்வையிட்டனர். இக்குழுவினருடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் இயக்குநர் திரு. லட்சுமிபதி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி முகமை இயக்குநர், மகளிர் திட்ட அலுவலர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் மற்றும் அலுவலர்களும் உடன் சென்றனர்.

04.01.2014 அன்று குஜராத் குழுவினர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியர் திரு. கே. வீரராகவராவ், இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சி முகமை திட்ட இயக்குநர், மகளிர் திட்ட அலுவலர், புதுவாழ்வு திட்ட மேலாளர் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர், பெருமாள்பட்டு ஊராட்சியில் உள்ள சுகாதார வளாகத்தைப் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களில் ஒன்றான சுகாதார வளாகங்கள் மிகச் சிறப்பான முறையில் பராமரிக்கப்படுவதாக குஜராத் மாநில அரசு உயர் அலுவலர்கள் பாராட்டினார்கள்.

குஜராத் மாநில அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்களில் ஒன்றான சுகாதார வளாகங்கள் மிகச் சிறப்பான முறையில் பராமரிக்கப்படுவதாக பாராட்டினார்கள்.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார
வளாகங்களை பார்வையிட வருகை தந்த குஜராத் மாநில அரசு உயர் அலுவலர்கள் குழு

நம் மாநிலத்தில் சுகாதார வளாகங்களின் சிறப்பான செயல்பாட்டினை அறிந்து தங்கள் மாநிலங்களிலும் சுகாதார வளாகங்களை அமைக்க பிற மாநில அரசுகளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அனைத்து ஊராட்சிகளிலும் சுகாதார வளாகங்கள் சிறப்பாக செயல்படுகின்றன.

குஜராத் மாநில அரசு உயர் அலுவலர்கள் குழுவினர், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் மற்றும் முடிச்சூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள சுகாதார வளாகங்கள், கழிவு பொருட்களைப் பயன்படுத்தி எரிவாயு தயாரிக்கும் அமைப்புகள் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள சுகாதாரம் வளாகம் ஆகியவற்றை பார்வையிட்டனர்.

பிளஸ் டூ தேர்வு: வெற்றிப் பாதைக்கு வழிகாட்டி!

பொன். தனசேகரன்

பிளஸ் டூ தேர்வு எழுதும் மாணவர்கள் வெற்றிகரமாகத் தேர்வு எழுத பயனுள்ள தகவல்கள் இதோ...

பிளஸ் டூ தேர்வு... மாணவர்களின் வாழ்க்கையில் திருப்புமுனை. இத்தேர்வில் மாணவர்கள் எடுக்கும் மதிப்பெண்களைப் பொருத்துதான், எதிர்காலத்தில் படிக்க வேண்டிய பாடங்களையும், சேர வேண்டிய கல்வி நிறுவனங்களையும் தேர்வு செய்ய முடியும். இந்த தேர்வுக்கு மாணவர்கள் தயாராகி வரும் சூத்திரங்கள், சமன்பாடுகள், கோட்பாடுகள் போன்ற வற்றை குறிப்புகளாக எடுத்து வைத்துக் கொண்டு, அவ்வப்போது எடுத்துப் படித்துப் பார்க்க வேண்டும். இதனால்,அவைஎப்போதும்மறந்துபோகாது.மனப்பாடப் பாடல்களை மனனம் செய்தால் மட்டும் போதாது. தவறு இல்லாமல் எழுதிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் தேர்வின் போது தடுமாற்றம் இருக்காது. தொடர்ந்து இடைவிடாமல் படித்துக் கொண்டிருப்பதை விட, சிறிய

நேரம் இது. தேர்வு நெருங்க, நெருங்க பதற்றம் பற்றிக் கொள்ளும். தேவையில்லாமல் பதற்றப்பட வேண்டியதில்லை. படிக்க வேண்டிய பாடங்களை தள்ளிப் போடாமல் படித்து விட்டாலே கடைசி நேரம் பதற்றம் இருக்காது. பாடங்களை நன்றாக படித்திருந்தாலே தன்னம்பிக்கை ஏற்பட்டு விடும்.

தேர்வுக்கு முந்தைய நாட்களில் நள்ளிரவு வரை கண்விழித்துப் படிக்க வேண்டாம். போதிய தூக்கம் இல்லாவிட்டால் அடுத்த நாள் தேர்வு எழுதும் போது சோர்வாக இருக்கும் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். டியூஷனில் போய் படித்தாலும் வீட்டிலும் படிக்க வேண்டும். எப்போதும் புத்தகமும் கையுமாக இருப்பது போல் காட்டிக் கொண்டிருக்க வேண்டாம்.

தேர்வு நேரத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிக நேரம் பார்ப்பது உங்களது படிப்புக் கவனத்தை சிதறடிக்கக் கூடாது. வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தாலும்,தனிஅறையில்அமர்ந்துபடிக்கவேண்டும். வீட்டில் உள்ளவர்களுடன் வீண் வாக்குவாதம் செய்து நேரத்தை வீணடிக்கக் கூடாது. அமைதியான சூழ்நிலையில் மனதை ஒருநிலைப்படுத்தி பாடத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

படிக்க வேண்டிய பாடங்களை தள்ளிப் போடாமல் படித்து விட்டாலே கடைசி நேரம் பதற்றம் இருக்காது. பாடங்களை நன்றாக படித்திருந்தாலே தன்னம்பிக்கை ஏற்பட்டு விடும்.

இடைவெளி விட்டுப் படிப்பது நல்லது. பாடங்கள் மனதில் நன்கு பதியும். கடினமான வினாக்களுக்கான விடைகளை எழுதிப் பார்க்கலாம். வரைபடங்களை முன்னதாகவே போட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் தேர்வு நேரத்தில் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் படங்களை வரைந்து விடைகளை எழுதி முடிக்க முடியும்.

தேர்வுநேரத்தில்'கேள்வித்தாள்அவுட்ஆகிவிட்டது,இந்தக் கேள்விகள்தான் வரும்' என்ற வதந்திகளை நம்பாதீர்கள். இருக்கின்ற நாட்களில் எந்தெந்தப் பாடங்களுக்கு எவ்வளவு நாட்கள் ஒதுக்கிப் படிக்க வேண்டும் என்பதைத் திட்டமிட்டு படிக்க வேண்டும். தேர்வு நெருங்க நெருங்க படிப்பைத் தவிர வேறு எதிலும் கவனத்தைச் செலுத்தக் கூடாது. தேர்வுகால அட்டவணையை அனைவருக்கும் தெரியும் இடத்தில் ஒட்டி வைக்கவும். எந்தெந்த தேதிகளில் தேர்வுகள் நடைபெறுகின்றன என்பதை அது அவ்வப்போது நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். (தொடரும்)

நன்றி: புதிய தலைமுறைக் கல்வி

மாற்றம் தந்த மகளிர் மேளா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சுய உதவிக் குழு மகளிரின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்து வருகிறது. அவர்களுக்கு தொழிற்பயிற்சிகள் வழங்கி, வங்கிக் கடன் பெற்றுத் தந்து, சுய தொழில் மேற்கொள்ள வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தருகிறது. சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யவும், அவர்கள் தயாரிக்கும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகிறது.

சென்னையில் 20.12.2013 முதல் 19.01.2014 வரை நடைபெற்ற மகளிர் மேளா 2014 ‘கிறிஸ்துமஸ்–புத்தாண்டு– பொங்கல்’ கண்காட்சி கண்காட்சியில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்களும் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தனர். இந்தக் கண்காட்சியின் சிறப்பம்சமாக கண்காட்சி வளாகத்தில் கேக், பிஸ்கட் போன்ற தின் பண்டங்கள் தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. கண்காட்சியில் விற்பனை அரங்குகள் அமைத்திருந்த சுய உதவிக் குழு மகளிர் கேக் மற்றும் பிஸ்கட் போன்ற தின்பண்டங்கள் தயாரிக்கும் பயிற்சியில் ஆர்வமுடன் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட திண்பண்டங்கள் கண்காட்சியிலேயே ‘இன்மதி’ என்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டது. பொதுமக்களும் சுவையாக இருப்பதாக சொல்லி ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.

எங்களை போன்ற பெண்களுக்கு பல்வேறு வகையிலும் நன்மைகளை செய்து, எங்களின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் என்றும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்

சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்கள் நடமாடும் விற்பனை வாகனம் மூலம் சென்னை தலைமைச் செயலகத்தில் விற்பனை செய்யப்பட்டது. இந்த வாகனத்தில் நான் தயாரித்த பிஸ்கட் வகைகளும் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலமும் எனக்கு வருவாய் கிடைத்துள்ளது.

வளர்ச்சி தந்த பயிற்சி...!

கேக் மற்றும் பிஸ்கட் போன்ற தின்பண்டங்கள் தயாரிக்கும் பயிற்சி பெற்ற திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி கௌரி கூறும்போது,

‘நான் எங்களின் குழுவினர் தயாரித்த பொருட்களை விற்பனை செய்வதற்காக வந்திருந்தேன். கண்காட்சி வளாகத்திலேயே பிஸ்கட் தயாரிக்கும் பயிற்சி சிறந்த பயிற்றுனர் மூலம் எங்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டது. பயிற்சியில் தின்பண்டங்கள் தயாரிப்பது குறித்து மிகவும் தெளிவாக சொல்லிக் கொடுத்தது மட்டுமல்லாமல், செய்முறைப் பயிற்சியும் கொடுத்தார்கள். இந்த செய்முறைப் பயிற்சியில் நான் தயாரித்த பிஸ்கட்டுகளை தலைமைச் செயலக வளாகத்தில் நடமாடும் விற்பனை வாகனம் மூலம் விற்பனை செய்ததில் எனக்கு வருவாயும் கிடைத்தது. இப்போது என்னால் பலவகையான பிஸ்கட்டுகளை தயாரிக்க முடியும். எனது குழுவின் மூலம் பிஸ்கட் தயாரிக்கும் தொழிலை செய்ய முயற்சிகள் செய்யப் போகிறேன். இந்தப் பயிற்சியை நான் பெற்றதன் மூலம் எனது குடும்பத்தின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும், இந்தப் பயிற்சி எனது வாழ்க்கையின் வளர்ச்சி’ என்கிறார் கௌரி.

திருமதி. கௌரி, க/பெ. தங்கவேல்,
பைன் தமிழ் மகளிர் சுய உதவிக் குழு,
கே.டி.சி. நகர், கீழநத்தம், திருநெல்வேலி
செல்பேசி 98650 14623

செல்வி மாலா... மாற்றுத் திறன் படைத்தவர்களாலும் சாதனைகள் படைக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவரை சொல்லலாம். தனது குறையை மறந்து பிறரின் மனதைக் கவரும் அழகிய வாழ்த்து அட்டைகள், கடவுள் படங்கள், இயற்கை காட்சிகள் என இவர் உருவாக்கும் கலைப்பொருட்களுக்குத் தான் எத்தனை எத்தனை அழகு. இதோ செல்வி மாலா தன்னுடைய வெற்றியின் கதையை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

உங்களைப் பற்றி...

என்னுடைய சொந்த ஊரே சென்னைதான். நடக்க முடியாத மாற்றுத் திறனாளியான நான் ஹாஸ்டலில் வளர்ந்தேன். என்னைப் போல பல பேர் அங்கு இருந்தார்கள். அங்கு இருக்கும் பெண்களுக்கு பல தொழில்களில் பயிற்சி கொடுப்பார்கள். எனக்கு வைக்கோலில் வாழ்த்து அட்டைகளை செய்வது குறித்து பயிற்சி தந்தார்கள். ஹாஸ்டலில் இருந்தபடியே வைக்கோலில் வாழ்த்து அட்டைகள், படங்கள் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்து வந்தேன்.

நீங்க குழுவில் இணைந்தது எப்படி?

ஒருமுறை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கண்காட்சியில் எனது பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்தேன். அப்போது அந்தக் கண்காட்சிக்கு வந்திருந்த சென்னை மகளிர் திட்ட அலுவலர் எனது படைப்புகளைப் பாராட்டினார். என்னைப் பற்றி விசாரித்த அவர், சுய உதவிக் குழுவின் மூலம் எனது பொருட்களை விற்பனை செய்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று கூறி, சுய உதவிக் குழுவில் உறுப்பினராக என்னை சேர்த்தார்.

உங்கள் தயாரிப்பு பொருட்களை எப்படி விற்பனை செய்கிறீர்கள்?

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெறும் மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சிகளில் எனது பொருட்களை விற்பனை செய்ய அரங்குகள் ஒதுக்கி தருகிறார்கள். அதன் மூலம் எனது பொருட்கள் நன்கு விற்பனை ஆகின்றன. எனக்கு நிறைய வாடிக்கையாளர் களும் கிடைத்துள்ளனர். மாற்றுத் திறனாளியான எனக்கு வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ■

பிறவியிலேயே நடைமறந்த கால்களை பெற்றிருந்தாலும், தன்னம்பிக்கையினால் இன்று பலராலும் பாராட்டப்படும் செல்வி. மாலாவின் கைவண்ணத்தில் சிறு வைக்கோல் கூட வாழ்வு பெறுகிறது.

வாழ்த்து அட்டைகளால் வளமான வாழ்க்கை...!

செல்வி மாலா,
தேன்கூடு மகளிர் சுய உதவிக் குழு,
1/1, குப்புசாமி தெரு – 2,
அயனாவரம், சென்னை – 600 023.
செல்பேசி 72993 20975

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெறும் மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சிகளில் எனது பொருட்களை விற்பனை செய்ய அரங்குகள் ஒதுக்கி தருகிறார்கள். எனது பொருட்களும் நன்கு விற்பனை ஆகின்றது.

மாற்றுத் திறன் படைத்தவர்களாலும் சாதனைகள் படைக்க முடியும்

17 வருடங்களாக வெளி உலகம் தெரியாமல் இருந்த என்னை, எனது திறமைகளை வெளிக்கொண்டு வந்து, நான் தயாரிக்கும் கலைப்பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்து, தன்னம்பிக்கையுடன் வாழ்வை எதிர் கொள்ள என்னுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியது மகளிர் திட்டம்தான் என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொள்கிறேன்.

விற்பனையில் முதலிடம் பெற்ற குழுவிற்கு சான்றிதழ்

மகளிர் மேளா 2014

"கிறிஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல் விற்பனைக் கண்காட்சி" நிறைவு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்தும் வகையில் சென்னையில் பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகளை நடத்துகிறது.

சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், 20.12.2013 முதல் 19.01.2014 வரை நடைபெற்று வந்த மகளிர் மேளா 2014 'கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சியின்' நிறைவு விழா 20.01.2014 அன்று நடைபெற்றது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. கே. பி. முனுசாமி அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு அதிக அளவில் விற்பனை செய்த சுய உதவிக் குழுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை சா. துரைசாமி அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பாரத ஸ்டேட் வங்கியின் துணை பொது மேலாளர் திரு. வி. வர்கீஸ் மற்றும் தலைமை மேலாளர் திரு முனியாண்டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக் கலந்து கொண்டனர்.

20.12.2013 முதல் 19.01.2014 வரை நடைபெற்ற மகளிர் மேளா 2014 'கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சியில்' ரூ. 54.21 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டோர்

மகளிர் மேளா 2014 'கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சியில்' 3,28,750 ரூபாய்க்கு விற்பனை செய்து முதலிடம் பெற்ற காஞ்சிபுரம் மகர ஒளி சுய உதவிக் குழு, 2,62,325 ரூபாய்க்கு விற்பனை செய்து இரண்டாம் இடத்தைப்

பெற்ற திண்டுக்கல் அன்னபூரணி சுய உதவிக் குழு, 2,08,185 ரூபாய்க்கு விற்பனை செய்து மூன்றாம் இடத்தைப் பெற்ற கோயம்புத்தூர் துளசி சுய உதவிக் குழு, புதுவாழ்வு திட்டம் சார்பில் அமைக்கப்பட்ட திருநெல்வேலி ஸ்டார் சுய உதவிக் குழு ஆகியவற்றிற்கும், சிறப்பாக அரங்குகள் அமைத்த நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவாரூர் மாவட்ட அரங்குகளுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டியதுடன், வங்கி முகவர் பயிற்சி பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த நித்யா மற்றும் கலா ஆகியோருக்கு பாரத ஸ்டேட் வங்கியில் வங்கி முகவர்களாக பணியாற்றும் ஆணைகளையும் வழங்கினார்கள்.

கண்காட்சியில் சிறப்பாக பணியாற்றிய சமுதாய வளப் பயிற்றுனர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர்கள், யோகா பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும், கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ■

வங்கி முகவர் பணிக்கான ஆணை

சிறந்த அரங்கிற்கான சான்றிதழ்

யோகா பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்

கவிதை

பெண்ணே! நீ உன்னை அறிவாய்!!

இயற்கை படைத்த மண்ணுலகில்
பிறந்த மாந்தரின் வாழ்வினையே
சீரும் சிறப்புடன் மாற்றிடவே
வந்திருப்பவர்கள் நாம்!

மண்ணுலகில் கோடான கோடி
உயிர்கள் இருந்த போதும்
நம்மை மட்டும் தேர்வு செய்த
காரணம் என்னவென்று
புரிகிறதா பெண்ணே!
புரிகிறதா பெண்ணே!!

யோசிக்க வேண்டாம் கண்ணே
பெண்தான் சக்தி...
பெண்ணிடம் அளவிட முடியாத
ஆற்றல் இருக்கிறது!

நேர்மை இருக்கிறது உன்னிடம்
இப்போது புரிகிறதா?
கடவுளின் உண்மையான பிள்ளை
நீதான் என்று!

உனக்கு கொடுத்த பணியை
திறமையாகவும் நேர்மையாகவும்
செய்திடு பெண்ணே!
பின்னர் நீ அறிவாய் அதனின்
உண்மை உயர்வை!!

எஸ். ஜோதிமணி,
பவானிசாகர் பகுதி
ஒருங்கிணைப்பாளர்,
உத்தண்டியூர் பகுதி,
ஈரோடு மாவட்டம்.

பகுதி - 9

காப்பீடு

இன்றைய அவசியத் தேவை

கடந்த இதழில் பயணக் காப்பீடு குறித்த பல்வேறு விபரங்களை அறிந்து கொண்ட நாம், இந்த இதழில் கால்நடைகளுக்கான காப்பீடு குறித்த விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

கால்நடை காப்பீட்டுத் திட்டம்

மத்திய அரசின் நிதியுதவியுடன் கால்நடைக் காப்பீட்டுத் திட்டத்தை, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இக்காப்பீட்டுத் திட்டமானது, விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பவர்களுக்கு, திடீரென்று ஏற்படும் கால்நடை இழப்பிலிருந்து பாதுகாப்பு அளித்தல் மற்றும் கால்நடை காப்பீட்டின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர வைத்து, திட்டத்தை பிரபலப்படுத்தி, கால்நடை மற்றும் அதைச் சார்ந்த பொருட்களின் தரத்தை உயர்த்துதல் என்ற இரண்டு நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், கால்நடைகளுக்கு அதிகபட்சமான சந்தை மதிப்பை இழப்பீடாகப் பெறும் வகையில் காப்பீடு செய்யப்படுகின்றன. காப்பீட்டிற்கான பிரிமியக் கட்டணத்தில் 50விழுக்காடுஅரசுமானியமாகவும்,மீதமுள்ள50விழுக்காடு கால்நடை வளர்ப்போரிடமிருந்தும் பெறப்படுகிறது.

உள்நாட்டு மற்றும் கலப்பின வகை கறவை பசுக்கள் மற்றும் எருமைகள் ஆகிய கால்நடைகள் இந்த திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்படும். உள்நாட்டு மற்றும் கலப்பின பசுக்கள் மற்றும் எருமைகள் என்பது, ஏற்கனவே ஒரு கன்று ஈன்ற, தற்போது பால் கறந்த கொண்டிருக்கும், கறவை வற்றிய மற்றும் கர்ப்ப காலத்திலுள்ள அனைத்து கால்நடைகளையும் குறிக்கும்.

வேறு காப்பீட்டு திட்டத்தின் கீழ் வரும் கால்நடைகளுக்கு இத்திட்டத்தின் மூலம் காப்பீடு அளிக்க இயலாது. காப்பீடு மானியமானது ஒரு பயனாளிக்கு இரண்டு விலங்குகளுக்கு மூன்று வருடத்திற்கு அளிக்கப்படும்.

நமது புதுவாழ்வு திட்டத்தின் மூலம் 13,8975 ஆடுகளுக்கும், 111783 மாடுகளுக்கும் சுமார் 14 கோடி ரூபாய்க்கும் மேல் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 2197 ஆடுகளுக்கு ரூ. 83 இலட்சமும், 2116 மாடுகளுக்கு ரூ. 3 கோடியே 73 இலட்சம் காப்பீடு இழப்பு பெறப்பட்டுள்ளது. ■

இங்கிலீஷ்ல பேசலாம் ஈஸியா...

2000 ஆங்கில வார்த்தைகள் தெரிந்து கொள்வோம்

பகுதி - 10

உடல் உறுப்புகள்	Parts of Body
முழங்கால்	Knee-னீ
முழங்கை	Elbow-எல்போ
கணுக்கால்	Ankle-ஆங்க்கில்
குதிக்கால்	Heel-ஹீல்
மணிக்கட்டு	Wrist-ரிஸ்ட்
பாதம்	Foot-ஃபுட்
முதுகு	Back-பேக்
மண்டை ஓடு	Skull-ஸ்கல்
எலும்புக் கூடு	Skeleton-ஸ்கெலிடன்
சதை	Flesh-ஃபளஸ்

பூச்சிகள்	Insects
ஈ	House fly-ஹவுஸ்ஃபிளை
தும்பி	Dragon fly-ட்ராகன்ஃபிளை
வண்ணத்துப் பூச்சி	Butter fly-பட்டர்ஃபிளை
கருவண்டு	Beetle-பீட்டல்
வண்டு	Bug-பக்
மூட்டைப் பூச்சி	Bed Bug-பெட் பக்
கொசு	Mosquito-மஸ்கிடோ
சிலந்தி	Spider-ஸ்பைடர்
எறும்பு	Ant-ஆன்ட்
குளவி	Wasp-வாஸ்ப்

(தொடரும்)

கனவுகளை நனவாக்குவதில் தன்னிகரற்று விளங்குகிறது ஒரு பொதுத்துறை வங்கி

பெண்களின் முன்னேற்றத்திற்கான வங்கி...

பத்மா வெங்கடேசன், வங்கி மேலாளர்

தகுந்த சமயத்தில் ஒரு வங்கி நடத்தும் சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனத்தை அணுகி, பெண்கள் செய்யக் கூடிய தொழில் சார்ந்த ஒரு துறையில் இணைந்து பயிற்சி (Self Employment Training) பெற்று, இன்று தங்களது சொந்தக் காலில் வெற்றி நடைபோடும் இவர்களைப் போல பலரது வாழ்வின் வெற்றி நிகழ்வுகள் நடப்பது எப்படி என்று பார்ப்போமா?

அழகில்லாத பெண் என்று யாருமே கிடையாது. தன்னை அலங்கரிக்கத் தெரிந்த அல்லது அலங்கரிக்கத் தெரியாத பெண் என்றுதான் இருவகை பெண்கள் உள்ளனர் என்கிறார், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தி.

பொருள் வளம் குன்றிய ஆனால் மன வளம் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்த சாந்தி தன் (கணவர் ஒரு ஆட்டோ ஓட்டுனர்) குடும்ப வருமானமும் குறைவு என்பதால் குடும்பத்தை செம்மையாக்க விரும்பினார். என்ன முயன்றும் பொருளாதார முன்னேற்றம் காண முடியாத நிலையில் வாழ்க்கையின் விடிவெள்ளியாக ஒரு வங்கியை அணுகினார். தகுந்த சமயத்தில் அந்த வங்கியின் சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தின் உதவியுடன் பெண்களுக்காக அழகுக் கலையை கற்று அழகு நிலையம் துவங்கியுள்ளதுடன், இன்று ஒரு வாடகை காரை வாங்கி அதன் மூலமும் நல்ல வருமானமும் ஈட்டுகிறார்.

ஆள் பாதி ஆடை பாதி என்ற பழமொழியை தன் வாழ்க்கையின் தாரக மந்திரமாக மதிக்கும் சரோஜா ஒரு நலிந்த குடும்பத்தில் வளர்ந்தவர். அன்றாடம் உணவிற்கே கஷ்டப்படும் நிலை மாறி இன்று நலம் தரும் ஒரு ஆயத்த (ரெடிமேட்) ஆடை நிலையத்தை திறம்பட நடத்துகிறார்.

இந்த இரு வெற்றிக் கதைகளும் எங்கோ நடப்பவை அல்ல. நம் தமிழ்நாட்டில் நடந்து வரும் நிதர்சன நிஜங்கள். இவைகளைப் போல் எண்ணில் அடங்கா நிகழ்வுகள். இவைகளுக்குள்ள ஒற்றுமை என்ன...?

மேற்படி நிகழ்வுகளை நனவாக்குவதில் தன்னிகரற்று விளங்குகிறது ஒரு பொதுத்துறை வங்கி – அந்த வங்கியை எப்படி அணுகலாம்? அதன் மூலம் பெண்கள் எளிதில் செய்யக் கூடிய சிறு தொழில்களை எப்படி துவக்கலாம்? எப்படி வாழ்க்கையில் முன்னேறலாம்? என்பதற்கான வித்துதான் இந்த தொடர். பெண்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கி, அவர்களை சமுதாய நீரோட்டத்தில் பீடுநடை போட வைப்பதில் இந்த வங்கியின் பங்கு மகத்தானது.

நீங்களும் இதுபோல வெற்றி நடை போட, இந்த வங்கியில் கணக்கு துவங்குவது எப்படி? அதன் நடை முறைகள் என்ன? அவைகளை பெண்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு எப்படி பயன்படுத்தலாம்? என்பதைப் பற்றியெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமா? அந்த வங்கி எது என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறதா? அடுத்த இதழ் வரை காத்திருங்கள். ■

திருமதி வி. மகேஸ்வரி,
அஞ்சு மகளிர் சுய உதவிக் குழு,
273, திருவள்ளுவர் நகர்,
அயனாவரம், சென்னை – 600 023.
செல்பேசி 97100 25279

சுவையான நெல்லிக்காய் தொக்கு

தேவையான பொருட்கள்

நெல்லிக்காய் (பெரியது) – 5, மிளகாய் தூள் – 1/2 ஸ்பூன், மஞ்சள் தூள் – 1/4 ஸ்பூன், வெந்தயத்தூள் – 1/4 ஸ்பூன், நல்லெண்ணெய் – 1/2 ஸ்பூன், பெருங்காயத்தூள் – 1/4 ஸ்பூன், கடுகு, உப்பு தேவையான அளவு.

செய்முறை

நெல்லிக்காயை நன்கு கழுவவும். ஒரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் விட்டு, அதில் நெல்லிக் காயையும், சிறிது உப்பையும் போட்டு, அடுப்பில் வைத்து வேக வைக்கவும். பத்து நிமிடத்திற்கு பின் வெந்துள்ள நெல்லிக்காயை விரல்களால் அழுத்தினால் நெல்லிகாய் வில்லைகளாக வரும். அதுதான் சரியான பதமாக கருதி அடுப்பில் இருந்து இறக்கவும். பின்னர் வெந்துள்ள நெல்லிக் காய்களின் கொட்டையை எடுத்து விட்டு சதையை மட்டும் தனியாக வைக்கவும்.

ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடுபடுத்தவும். எண்ணெய் சூடானதும் அதில் பெருங்காயத்தூள், கடுகு, மஞ்சள் தூள், வெந்தயத்தூள் போன்றவற்றை போட்டு வதக்கவும். நன்கு வதக்கிய பின்னர் நெல்லிக்காயை அதனுடன் சேர்த்து நன்றாக பச்சை வாசனை போக வதக்கி எடுத்தால், சத்தான சுவையான நெல்லிக்காய் தொக்கு தயார். ■

கற்றாழை இருக்க கவலை எதுக்கு...!

தளிர் பச்சை, இளம் பச்சை, கரும் பச்சை எனப் பலவிதங்களில் இருக்கிகும் சோற்றுக்கற்றாழையின் முதிர்ந்த கற்றாழையில்தான் மருத்துவ குணம் நிறைந்து காணப்படுகிறது. 40 வயதைக் கடந்து விட்டாலே கை கால் மூட்டுகளில் வலி ஏற்படுவது தற்போது சர்வ சாதாரணமாகி விட்டது. அதிலும் வயது முதிர்ந்தவர்களின் நிலையே மிகவும் சிரமம். இவர்களுக்கு சோற்றுக் கற்றாழை அருமருந்தாகும்.

மஞ்சள் காமாலை நோய்க்கு மருந்தாகப் பயன்படுவதுடன், கூந்தல் தைலம், அழகு

சாதனப் பொருட்களிலும் சோற்றுக் கற்றாழை சேர்க்கப்படுகிறது. கற்றாழையின் சோற்றை கண்களின் மேல் வைத்தால் கண் நோய், கண் எரிச்சல் போன்றவை நீங்கும்.

விளக்கெண்ணெயுடன் கற்றாழையின் சோற்றை சேர்த்து காய்ச்சி காலை மாலை இருவேளை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் உடல் சூடு குறையும். நீண்ட கால மலச்சிக்கல் நீங்கும்.

கல்லீரல் பலம் பெறும்.

வைட்டமின் சி மற்றும் பி சத்துக்களும், தாதுக்களும் நிறைந்த கற்றாழையின் சாறு நமது தோலில் நீரை விட நான்கு மடங்கு வேகமாக ஊடுருவக் கூடியது. நமது சருமத்திலுள்ள கொலாஜன் எனப்படும் கொழுப்பு சத்தை குறைக்கக் கூடிய புரோட்டீன் கற்றாழையில் அதிகம் உள்ளதால், முகத்திலுள்ள சுருக்கத்தை போக்கி இளமையான தோற்றத்தை தரும். பிரயாணக் களைப்பினால் சோர்வுற்ற கால்களுக்கு கற்றாழைச் சாற்றைத் தடவலாம். சருமத்தில் ஏற்படும் எரிச்சலை அடக்கி, சருமத்திற்கு குளிர்ச்சி தருவதுடன், திசுக்களைப் புதுப்பித்து, ஈரப்பதத்தையும் அளிக்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதலை குணமாக்கும் அருமருந்தாக சோற்றுக் கற்றாழை பயன்படுகிறது. ■

40 வயதைக் கடந்து விட்டாலே கை கால் மூட்டுகளில் வலி ஏற்படுவது தற்போது சர்வ சாதாரணமாகி விட்டது. அதிலும் வயது முதிர்ந்தவர்களின் நிலையே மிகவும் சிரமம். இவர்களுக்கு சோற்றுக் கற்றாழை அருமருந்தாகும்.

பாட்டியின் பாம்படம்

பாம்படம் என்பது ஒரு கனம் நிறைந்த ஒரு வகை காதணியாகும். சிறுவயதிலேயே காது குத்தி அந்த சிறிய துளையில் பனை ஓலையை சுருட்டி வைத்து, குனுக்கு எனும் கனமான ஈய குண்டை தொங்க விட்டு, காது துளையை பெரிதுபடுத்துவார்கள். இந்த முறைக்கு காது வடித்தல் என்று பெயர். தமிழ்நாட்டில் குறிப்பாக மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள வயதான பெண்கள் பாம்படம் அணிகின்றனர்.

நமது செவி மடலின் கீழ் பகுதியில் உள்ள சில புள்ளிகள் அழுத்தப்பட்டால் மூளையின் நினைவாற்றல் செல்கள் தூண்டப்படும் அதனால் நினைவாற்றல் சக்தி அதிகரிக்கும் என்பதை அறிந்து நமது முன்னோர்கள் பாம்படம் போன்ற காதணிகளை அணிகின்றனர். ■

பயனுள்ள குறிப்புகள்...

முகத்திற்கு பொலிவு தரும் இயற்கைப் பொருட்கள்

அழகைப் பராமரிக்கும் பழங்கள்

அழகாக இருக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும். இரசாயனப் பொருட்கள் நிறைந்த அழகு சாதனங்களுக்காக அதிக அளவில் பணம் செலவழிக்கக்கூட இன்று ஏராளமானவர்கள் தயாராக இருக்கின்றனர். வேதிப்பொருட்கள் கலந்து தயாரிக்கப்படும் அழகு சாதனங்களால் பல்வேறு பக்க விளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. எனவே அழகான தோற்றத்தை பெற விரும்பும் பெண்களுக்கு கைகொடுக்க இயற்கைப் பொருட்கள் நம்மிடையே ஏராளமாக உள்ளன. அந்தப் பொருட்களைப் பயன்படுத்தினால் பக்க விளைவுகள் ஏதும் ஏற்படாது என்பதுடன் அழகும் கூடும் என்பது உறுதி.

ஆரஞ்சுப் பழம்

சுளை சுளையாக காணப்படும் கமலா ஆரஞ்சுப் பழம் குளிர்காலத்தில் அதிகம் கிடைக்கும். வைட்டமின் ஏ மற்றும் சி சத்துக்கள் அதிகம் நிறைந்த இந்த பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், மேனி மினுமினுப்படையும். இப்பழத்தின் தோலினை காய வைத்து பவுடராக்கி, அதனுடன் தண்ணீர் சேர்த்து முகம் மற்றும் கைகளில் தேய்த்து வந்தால் வறண்ட சருமம் மாறி தோல் பளபளக்கும். உடல் நலத்தைக் காப்பதிலும் ஆரஞ்சுப் பழம் பெரிதும் உதவுகிறது.

> வேதிப்பொருட்கள் கலந்து தயாரிக்கப்படும் அழகு சாதனங்களால் பல்வேறு பக்க விளைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அழகான தோற்றத்தை பெற விரும்பும் பெண்களுக்கு கைகொடுக்க இயற்கைப் பொருட்கள் நம்மிடையே ஏராளமாக உள்ளன. அவைகளைப் பயன்படுத்தி அழகை நிரந்தரமாக்கலாம்.

> இயற்கை சத்து நிறைந்த பழங்களும், காய்கறிகளும் உடலுக்கு நலத்தையும் வலுவையும் தருகின்றன.

எலுமிச்சம் பழம்

இரண்டு ஸ்பூன் எலுமிச்சம் பழச் சாற்றை சுடுநீர் கலந்து, அதனுடன் இரண்டு ஸ்பூன் தேன் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் உடம்பில் உள்ள தேவையற்ற சதைகள் குறைந்து போவதுடன், உடலும் அழகு பெறும்.

தக்காளி பழம்

தோலில் தழும்புகள், கீறல் வடுக்கள் போன்றவை உள்ளவர்கள், தக்காளிப் பழக் கூழுடன், தயிர் கலந்து தழும்புகள் மற்றும் வடுக்கள் மீது பூசி, சிறிது நேரம் காயவிட்டு, பின்னர் தண்ணீர் விட்டு கழுவி வர தழும்புகள், கீறல்கள் மறையும். ■

திருமதி. அன்பு,
கற்பூர வள்ளி இருளர்
பெண்கள் சுய உதவிக் குழு,
ஒரத்தூர் கிராமம், தண்டரை அஞ்சல்,
செங்கல்பட்டு (தா), காஞ்சிபுரம் மாவட்டம்.
செல்பேசி 97914 02848

சிறு கீரை

செம்புச் சத்தும், அதிக வெப்பமும் கொண்ட இக்கீரை குடல், இதயம், மூளை, ரத்தம் ஆகியவைகளுக்கு நல்ல வலிமையை கொடுக்கக் கூடியது. சிறுகீரையை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் இருதய நோய்கள் தீரும். விஷ மருந்துகளால் பாதிக்கப்பட்டவர்கள் சிறு கீரையை வெறும் மிளகுடன் சேர்த்து கஷாயம் செய்து சாப்பிட்டால் விஷத்தின் வீரியம் தணிந்து அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் தீரும். ■

பூவரசம் பூ

விஷத்தை போக்கும் தன்மை வாய்ந்தவையாக பூவரசம் இலைகள் இருப்பதால் பூச்சிக்கடி மற்றும் விஷ வண்டுக்கடிகளுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. பூவரசம் பூவை அரைத்து சொறி, சிரங்கு போன்றவற்றின் மீது பூசினால் நிவாரணம் கிடைக்கும். மூட்டுப் பகுதியில் நீர் கோர்த்துக் கொண்டு வீக்கத்தால் சிரமப்படுபவர்கள், பூவரசம் பூவுடன், சம அளவு காய் பட்டை ஆகியவற்றை சேர்த்து அரைத்து, நல்லெண்ணெயில் சேர்த்து காய்ச்சி, மூட்டு வீக்கங்களின் மேல் பூசி வர வீக்கம் கரைந்து வலி குறையும். ■

மகளிர் வாழ்விலும் வளர்ச்சியிலும்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டரை ஆண்டு சாதனைகள்

(31.12.2013 வரை)

அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் பல புரிந்து வரும் பெண்கள் பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற உன்னத நோக்குடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் பலவற்றை தீட்டி வருகிறார். மகளிர் வாழ்வு வளம் பெறுவதற்காகத் தீட்டப்படும் திட்டங்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள் வாயிலாக முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு

2011-12ஆம் ஆண்டில் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் 65,000 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 22,214 ஊரக சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 15 ஆயிரம், 20,000 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 10,000 வீதமும் சுழல் நிதி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 10,548 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு 2012-13ஆம் ஆண்டில் தலா ரூபாய் 10,000 வீதம் சுழல் நிதி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. வங்கிகள் மூலம் கடன் இணைப்பாக ரூபாய் 11,455.86 கோடி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக ஒன்று கூடி போராடும் சுய உதவிக் குழுக்களுக்கும், அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களையும் 100 விழுக்காடு கற்றவர்களாக உருவாக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் விருதுகள் வழங்கப்படுகிறது.

ஊக்க நிதி

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒரு இலட்சம்

சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு

ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இதுவரை தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 8,000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 80 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 150 அண்டை வீட்டு கூட்டமைப்புகளுக்கு ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 1.50 கோடி ஊக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்திறன் பயிற்சிகள்

படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், இளைஞர் தொழிற்திறன் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 31,160 இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அதில் 11,807 இளைஞர்கள் 'திறன் ரசீதுத் திட்டம்' மூலம் கணினிப் பயிற்சி பெற்றுள்ளனர். சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழிற்திறனை மேம்படுத்துவதற்காக 8,081 பெண்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

கலாச்சாரப் போட்டிகள்

சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும் மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்திலும், வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே 2012–13ஆம் ஆண்டில் ரூபாய் 160 இலட்சம் செலவில் கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. 2013–14ஆம் ஆண்டில் ரூபாய் 108.17 இலட்சம் செலவில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே கலாச்சாரப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கல்லூரிச் சந்தைகள்

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி, கல்லூரி மாணவர்களிடையே பிரபலப்படுத்தவும் மற்றும் மேம்படுத்தவும் 32 மாவட்டங்களில் 2012–13ஆம் ஆண்டில் 128 'கல்லூரி சந்தைகள்' நடத்தப்பட்டு, ரூபாய் 156.16 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2013–14ஆம் ஆண்டில் 32 மாவட்டங்களில் 40 கல்லூரி சந்தைகள் நடத்தப்பட்டு, ரூபாய் 72 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தை உருவாக்கிதற்போதுசெயல்பட்டுவரும்மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்களுடன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள 'பொங்கல் திருநாள்' வாழ்த்துச் செய்தி வருமாறு

பொங்கல் திருநாளை உவகையுடன் கொண்டாடும் தமிழர்கள் அனைவருக்கும் இனிய நல் வாழ்த்துகள்!

உலகத் தமிழர்கள் எல்லோரும் உவகையுடன் கொண்டாடும் பொங்கல் திருநாளில் அனைவருக்கும் எனது உளமார்ந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற மகாகவி பாரதியாரின் சொல்லிற்கு ஏற்ப உழவுத் தொழிலைப் போற்றும் வகையில் இந்த இனிய பொங்கல் நன்னாளில், மக்கள் தங்களது மனமகிழ்ச்சியினை வெளிப்படுத்தும் விதத்தில் வீட்டினுள்ளும் வெளி வாசலிலும் வண்ணக் கோலங்களினால் அலங்கரித்து கடவுளுக்கு நன்றி செலுத்தும் வகையில், கரும்பு, காய்கறிகள் முதலியவற்றை படையலிட்டு, புது பானைக்கு மஞ்சள் தழையினைக் காப்பாக அணிவித்து, அதில் அரிசியிட்டு, பால் ஊற்றி அது பொங்கும் போது, 'பொங்கலோ பொங்கல்' என்று உற்சாகக் குரலெழுப்பி இறைவனை வழிபடுவார்கள்.

'மண்ணிலே முத்தெடுத்து பிறர்வாழ

வழங்கும் குணமுடையோன் விவசாயி'

–என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாக்கிற்கிணங்க, பிறர் வாழ பாடுபடும் விவசாயப் பெருமக்களின் நல்வாழ்விற்கென 'முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்', வேளாண் கருவிகள் மற்றும் உரங்கள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரி விலக்கு; சிறு குறு விவசாயிகளுக்கு முழு மானியத்திலும், ஏனைய விவசாயிகளுக்கு 75 சதவீத மானிய விலையிலும் நுண்ணீர்ப் பாசனக் கருவிகள்; உணவு உற்பத்தியை உறுதி செய்யவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும் பயறு வகை, சிறுதளை, விதைப் பைகள் விநியோகம்; விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் வகையிலான கொள்முதல் விலை; வறட்சி ஏற்பட்டிடின் உடனடி நிவாரணம் என பல்வேறு சிறப்பான திட்டங்களை உங்கள் அன்பு சகோதரியின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

பொங்கல் பண்டிகையைத் தமிழர்கள் இனிமையாகக் கொண்டாடி மகிழ்ந்திட எனது தலைமையிலான அரசு சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கியுள்ள இந்த இனிய வேளையில், என் அன்பிற்குரிய தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது இனிய பொங்கல் நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமது 'பொங்கல் திருநாள்' வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். ■

தொடர்பு ஏற்படுத்தி, அவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அதன் மூலம் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தி அவைகளை மாநில அளவில், தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி

சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக மகளிர் மேளா என்ற பெயரில், விழாக்காலங்களில் சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மகளிர் மேளா 2012–13 மற்றும் 2013–14 சிறப்பு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

வணிகக் குறியீடு

2012–13ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு அரசு, 'மதி' வர்த்தக பெயர் மற்றும் வணிகச் சின்னத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. 'மதி' வர்த்தக பெயர் மற்றும் வணிக சின்னம் பதிவு செய்யப்பட்டு அதற்குரிய சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

மதி பஜார் இணையதளம்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை இணையம் மூலம் சந்தைப்படுத்தும் வகையில், 'மதி பஜார்' (Mathi Bazaar) எனும் பெயரில் புதிய இணையதளம் ஆரம்பிக்க தயார் நிலையில் உள்ளது.



நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்

நீலகிரி மாவட்டம், குன்னூர் தூய வளனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 04.01.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, பொங்கல் திருநாளை முன்னிட்டு, சிறப்பு பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி–சேலைகள் வழங்கும் திட்டங்களை தொடங்கி வைத்தார்கள். புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த பணிகளை தொடங்கி வைத்ததோடு, பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், மேல் குந்தா, இத்தலார், சேரங்கோடுமற்றும் நெலாக்கோட்டை ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனுதவி தொகைக்கான காசோலைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு விருது

பெண்களுக்கு எதிராக நடைபெறும் சமூக அநீதிகள் மற்றும் வன்கொடுமைகளுக்கு எதிராக ஒன்று கூடி போராடும் சுய உதவிக் குழு பெண்களை ஊக்குவித்திட 5 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 1 இலட்சம் வழங்கப்படவுள்ளது. இதில் 2 சுய உதவிக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களையும் 100 விழுக்காடு கற்றவர்களாக உருவாக்கும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 30 விருதுகள் அறிவிக்கப்பட்டு, தலா ரூ. 50,000/– வழங்கப்படவுள்ளது. 12 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2013–14ஆம் ஆண்டிலும் 100 விழுக்காடு முழுக் கல்வியறிவு பெற்ற 30 ஊராட்சி கூட்டமைப்புகளுக்கு தலா ரூ. 50,000/– வழங்கப்படவுள்ளது.

வங்கி முகவர்கள் நியமனம்

2013–14ஆம் ஆண்டில் நிதி உள்ளாக்கத்தை வலியுறுத்தி 1000 வங்கி முகவர்களை சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து நியமிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 2116 சுய உதவிக் குழு பெண்கள் வங்கி முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

> சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக மகளிர் மேளா என்ற பெயரில், சிறப்பு விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள்

2013–14ஆம் ஆண்டு செயல் திட்டக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டு, தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் ஆகியவற்றுக்காக ரூ. 255.77 கோடி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம், 31 மாவட்டங்களில் 170 வட்டாரங்களில் 5814 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1500 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 2013–14ஆம் ஆண்டில், ஒரு கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு ரூ. 10 இலட்சம் வீதம் 2323 கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கு சமுதாய நிதி வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் தரமும் விற்பனையும் மேம்பட பொருளாதார தொழில் தொகுப்புகள் கண்டறியப்பட்டு, 2012–13ஆம் நிதியாண்டில் 'ஒரு கிராமம் – ஒரு உற்பத்திப் பொருள்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பரீட்சார்த்த முறையில் 150 தொழில் தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை மேம்படுத்துவதற்காக மாவட்டங்களுக்கு ரூ. 10.75 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. ■

தொழிற்திறன் பயிற்சிகள்

மகளிர் மேளா விற்பனைக் கண்காட்சி

2013-14ஆம் ஆண்டில் நிதி உள்ளாக்கத்தை வலியுறுத்தி 1000 வங்கி முகவர்களை சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து நியமிக்க அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை மகளிர் திட்டத்தின் கீழ் 832 சுய உதவிக் குழு பெண்கள் வங்கி முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கலாச்சாரப் போட்டிகள்

கல்லூரிச் சந்தை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ECO FRIENDLY · QUALITY · INNOVATIVE · SHG PRODUCT · TRADITIONAL · AFFORDABLE

சுய உதவிக்குழு தயாரிப்பு

மதி
MATHI TAMIL NADU INDIA

வணிகக் குறியீடு

நம் மாவட்டம்

நாகப்பட்டினம்

கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு ஆதார நிதி

நாகப்பட்டினம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்படுகிறது. 05.01.2013 அன்று நாகப்பட்டினம் தெத்தி ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, 63 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா ரூ. 50 ஆயிரம் வீதம் 31,50,000 ரூபாயினை ஆதார நிதியாக வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருப்பூர்

வேலை வாய்ப்பு பெறுவோம்

திருப்பூரில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் நடைபெற்ற சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் 620 நபர்கள் கலந்து கொண்டனர். ஆயத்த ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள், கணிப்பொறி நிறுவனங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் உட்பட 21 நிறுவனங்களின் பிரதிநிதிகள் இம்முகாமில் பங்கு கொண்டு, தங்கள் நிறுவனத்திற்கு தகுதி வாய்ந்த 260 இளைஞர்களை தேர்வு செய்தனர். தேர்வு பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திரு கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார். ■

திருவள்ளூர்

விழிப்புணர்வு கருத்தரங்கு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடு குறித்து மாவட்ட அளவிலான அனைத்துத் துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு திருவள்ளூர் மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் திரு கே. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 28.12.2013 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசும்போது, 'வறுமையற்ற தமிழகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தீட்டியுள்ள 'தொலைநோக்குப் பார்வை 2023' என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கு, பல்வேறு துறைகளில் செயல்படும் வாழ்வாதார திட்டங்கள், பொதுவான இலக்கு மக்கள் நலன் குறித்த திட்டங்களை செயல்படுத்தும் போது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தும் திட்டங்களையும் உட்படுத்தி ஒருங்கிணைத்து செயல்படவேண்டும்' என்று குறிப்பிட்டார். ■

திருநெல்வேலி

மாவட்ட அளவிலான கருத்தரங்கு

அனைத்துத் துறையினரையும் ஒருங்கிணைத்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை செயல்படுத்துவதற்காக, மாவட்ட அளவிலான கருத்தரங்கம் 27.12.2013 அன்று திருநெல்வேலியில் மாவட்ட ஆட்சியர் திரு. மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, 'ஊரக வாழ்வாதார இயக்கத்தினை அனைத்துப் பகுதிக்கும் கொண்டு செல்ல, அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து தங்களின் ஒத்துழைப்பை தர வேண்டும்' என்று குறிப்பிட்டார். இக்கருத்தரங்கில், புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர். ■

விழுப்புரம்

சுய உதவிக் குழு பெண்களுக்கு சூரிய ஆற்றல் உபகரணங்கள் பராமரித்தல் மற்றும் பயன்பாடு குறித்த பயிற்சி

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட ஒன்றியங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 30 மகளிருக்கு முறைசாரா எரிசக்தியை பயன்படுத்தும் பயிற்சினை மாண்புமிகு தமிழக தொழிற்துறை அமைச்சர் திரு ப. மோகன் அவர்கள் 10.01.2014 அன்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிண்டி தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணை இயக்குநர் திருமதி. தெய்வநாயகி, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் திரு வா. சம்பத், இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி க. முத்துமீனாள், விழுப்புரம் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு மகாலிங்கம், சங்கராபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் திரு எஸ். எஸ். அரசு உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

அரியலூர்

சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி கடன்

அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கயர்லாபாத், அருங்கால், ஏழேரி, பொட்டவெளி, அஸ்தினாபுரம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 9 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுயதொழில் தொடங்க ரூபாய் 14.50 இலட்சம் நேரடிக் கடன் தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் திரு எ. சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. எஸ். சாமுவேல் இன்பத்துரை மற்றும் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்பின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர்

குஜராத் குழுவினர் ஆய்வு

குஜராத் மாநில ஊரக வளர்ச்சித்துறை செயலர் மற்றும் ஆணையர் டாக்டர் வி. திருப்புகழ், இ.ஆ.ப., மற்றும் குஜராத் மாநில நகர்புற (வீட்டுவசதி) வளர்ச்சித்துறை செயலர் திருமதி. மோனா காந்தார், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையிலான குஜராத் மாநில அரசு உயர் அலுவலர்களின் குழு 04.01.2014 அன்று திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டு கிராமத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தையும், சுகாதார வளாகத்தையும் ஆய்வு செய்தனர். இக்குழுவினருடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் இயக்குநர் திரு. லட்சுமிபதி, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி முகமை இயக்குநர், மகளிர் திட்ட அலுவலர் திருமதி சினேகலதா, மாவட்ட புதுவாழ்வு திட்ட அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடன் சென்றனர். ■

சென்னை

பயிற்சி அளிப்பவர்களுக்கு பயிற்சி

சென்னையில் 07.01.2014 மற்றும் 08.01.2014 ஆகிய இரண்டு நாட்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சிகளை அளிக்கும் பயிற்றுனர்களுக்கு தேசிய ஊரக வாழ்வாதாரத்தின் நோக்கம் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் ஓய்வு பெற்ற 31 வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இப்பயிற்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டார். இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நிதி உள்ளாக்கம் குறித்த பயிற்சி வழங்குவதற்கு தேர்வு பெற்றவர்களாகவும், மாவட்ட அளவில் ஊரக வாழ்வாதார இயக்கத்தினை முன்னோக்கி எடுத்துச் செல்பவர்களாகவும் இருப்பர். சுய உதவிக் குழுக்களில் உள்ள ஏழை, மிகவும் ஏழை மற்றும் நலிவடைந்தவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு இந்தப் பயிற்சி மிகவும் உறுதுணையாக இருக்கும். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாஸ்ட்டோன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

வங்கியாளர்களுக்கான கருத்துப் பட்டறை கூட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, புதிய நோக்கில் பல திட்டங்களை திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. அதில் ஒன்றுதான் வங்கியாளர்களுக்கான கருத்துப் பட்டறைகள் ஆகும்.

வங்கியாளர்களுக்கான கருத்துப் பட்டறைகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, நுண் தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதுவரை 189 நுண்தொழில்கள் துவக்கப்பட்டு, அவைகள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

இந்த 189 நுண்தொழில்களை விரிவுபடுத்தி மென் மேலும் சிறப்பாக செய்திட வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுத்தருவதற்கும் மற்றும் வங்கியாளர்களுக்கும், பயனாளிகளுக்கும் நல்லுறவு ஏற்படுத்தும் நோக்கத்திலும் வங்கியாளர்கள் கருத்துப் பட்டறை ஆறு மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்ட செயலாக்க அலுவலகம் மூலம் 07.01.2014 அன்று மாமல்லபுரம் நகரில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக கூட்ட அரங்கில் காஞ்சிபுரம் மாவட்ட திட்ட பகுதி வங்கியாளர்களுக்கான கருத்துப் பட்டறை கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார இயக்கத்தின் முதுநிலை ஊரக நிதி வளர்ச்சி அலுவலர் திரு லட்சுமி நாராயணன் அவர்கள் தலைமையிலும், காஞ்சிபுரம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, நுண் தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதுவரை 189 நுண்தொழில்கள் துவக்கப்பட்டு, அவைகள் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன.

மாவட்ட வங்கிகளின் முன்னோடி வங்கி அலுவலர் திரு ஜெகன்நாதன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோவளம், கூவத்தூர், திருப்போரூர், கடப்பாக்கம் ஆகிய ஊர்களில் செயல்படும் இந்தியன் வங்கிக் கிளைகளின் முதுநிலை மேலாளர்கள், கல்பாக்கம் கனரா வங்கிக் கிளை முதுநிலை மேலாளர்கள் மற்றும் சட்ராஸ் கூட்டுறவு வங்கி மேலாளர், மாவட்ட செயலாக்க அலுவலர், ►►►

அவர்கள் கடனை திரும்ப செலுத்துவதும் முறையாக நடைபெற்று வருவதாகவும் பாராட்டு தெரிவித்தனர்.

இறுதியில் முன்னோடி வங்கி அலுவலர் 2013–14ஆம் ஆண்டில் நேரடி கடன் வழங்கப்பட வேண்டிய குழுக்களை Grading செய்து, ஜனவரி மாதத்திற்குள் இலக்கீட்டினை அடைய அனைத்து வங்கி



கூட்டமைப்பு பிரதிநிதிகள், கூட்டுவள மைய பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலாக்க அலுவலர் திட்ட செயல்பாடுகள் பற்றி Power Point மூலம் விவரித்தார். கருத்தரங்கு கூட்டத்தில் தற்போது நடைபெறும் அனைத்து திட்டங்கள் பற்றியும் முதுநிலை ஊரக நிதி அலுவலர் திரு லட்சுமி நாராயணன் அவர்கள் விரிவாக விவரித்தார்கள். இத்திட்டங்களில் அனைத்து வங்கி அலுவலர்கள் ஒருங்கிணைந்து கடனுதவி அளிக்க வேண்டிய அவசியம் குறித்தும் தெரிவித்தார். 273 சுய உதவிக் குழுக்களுக்கு 2013–14ஆம் ஆண்டில் நேரடி வங்கிக் கடன் வழங்குவது குறித்தான இலக்கீட்டினை அடைவது குறித்தும் வங்கியாளர்களுடன் விரிவாக ஆலோசனை செய்தார்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதி நிதிகள், வங்கிகள் மூலம் கிடைக்கப் பெறும் உதவிகள் பற்றியும், ஊராட்சி கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் குறித்தும் பெருமையுடன் தங்கள் கருத்துக்களை தெரிவித்ததுடன், ஏற்கனவே நேரடி கடன் பெற்று நல்ல முறையில் திரும்ப செலுத்திய குழுக்களுக்கு இரண்டாவது தவணை கடன் தொடர்ந்து வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

தொடர்ந்து அனைத்து வங்கி மேலாளர்களும் தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர். அனைத்து வங்கி அலுவலர்களும் IFAD திட்ட பகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி கடன் வழங்குதல் பயனுள்ளதாக உள்ளது எனவும், மேலாளர்களும் ஒத்துழைப்பார்கள் என தெரிவித்தார்.

பின்னர் வங்கி அலுவலர்களை இத்திட்டத் தின் மூலம் நடைபெறும் சில பணிகளை கள பார்வையிட அழைத்து செல்லப்பட்டது. புதுப்பட்டிணம் ஊராட்சியில் மகளிர் குழு கூட்டமைப்பின் மூலம் துயர் குறைப்பு நிதி யில் பயன் பெற்ற பயனாளிகளையும், மகளிர் குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

புதுப்பட்டிணம் ஊராட்சியில் நுண்ணிய குறுந்தொழில் திட்டத்தில் பயன் பெற்ற அழகுகலை நிலையம் மற்றும் வண்ண புடவை அச்சு தொழில் கூடத்தினை வங்கி யாளர்கள் பார்வையிட்டு பயனாளிகளுடன் கலந்துரையாடல் செய்தனர். தொழில்கள் பற்றிய விவரத்தினையும் தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் மற்றும் இலாப விவரங்களை கேட்டறிந்தனர்.

இதுபோன்ற திட்ட பயனாளிகளை நேரடி யாக பார்வையிட்ட முன்னோடி வங்கி அலுவலர் உள்ளிட்டோர் மிகுந்த பயனுள்ள ஒரு கருத்துப் பட்டறையாக அமைந்தது எனவும், துயர் குறைப்பு நிதி திட்டம் இதுவரை எந்த அரசு திட்டத்திலும் இல்லாத புதுமையான முன்னோடி திட்டம் எனவும் கருத்து தெரிவித்தனர். ■

திட்ட பயனாளிகளை நேரடியாக பார்வையிட்ட முன்னோடி வங்கி அலுவலர் உள்ளிட்டோர் மிகுந்த பயனுள்ள ஒரு கருத்துப் பட்டறையாக அமைந்தது எனவும், துயர் குறைப்பு நிதி திட்டம் இதுவரை எந்த அரசு திட்டத்திலும் இல்லாத புதுமையான முன்னோடி திட்டம் எனவும் கருத்து தெரிவித்தனர்.

கடலூர் மாவட்டம் குண்டு உப்பலவாடி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் (PLF) புதிய முயற்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் விழுப்புரம், கடலூர் மற்றும் நாகை மாவட்டங்களிலுள்ள ஆலப்பாக்கம், குண்டு உப்பலவாடி மற்றும் பெருந்தோட்டம் ஆகிய ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (PLF) NABFINS (NABARD FINANCE) நிறுவனத் தின் வணிக மேம்பாட்டு தொடர்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் திட்ட மேலாண்மை அலகால் மேற் கொள்ளப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம் NABFINS அலுவலர்கள் நேரடியாக களத்திற்கு சென்று குழுக்களை ஆய்ந்து அவற்றின் தரத்தை தெரிந்து கொள் கின்றனர். குழு உறுப்பினர்களின் கடன் தேவை, கடன் திருப்பி செலுத்தும் திறன் ஆகியவற்றை பொறுத்து அவர்கள் சார்ந்த குழுக்கள் வாயிலாக நேரடியாக கடன் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதம் பிற நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது குறைவாக உள்ளது.

வணிகத் தொடர்பாளர்களாக செயல்படும் கூட்டமைப்புகள் ஒவ்வொன்றும் தலா ரூபாய் ஒரு கோடிக்கும் மேலாக, பரிவர்த்தனையில் ஈடுபட்டு உள்ளன. கடன் பெற்ற சுய உதவிக் குழுவினர் மாதாமாதம் அசல் மற்றும் வட்டி ஆகியவற்றை குறிப்பிட்ட நாளில் செலுத்தி விடுவதால் இந்த திட்டம் NABFINS நிறுவனத்திடமும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. தமிழகத்தில் இம்முயற்சி ஒரு புதிய துவக்கம் ஆகும்.

கூட்டமைப்புகள் (PLF) வங்கியின் வணிக தொடர்பாளர்களாக செயல்படுவதால் மொத்த கடன் தொகையின் 2% அளவு சேவைக் கட்டணமாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இத்திட்டத்தின் மூலமாக பயனடைந்த அமுதா கூறுகையில்

என் பெயர் அமுதா, நான் கடலூர் மாவட்டம், குண்டு உப்பலவாடி கூட்டமைப்பின் செயலாளராக உள்ளேன். எங்கள் கூட்டமைப்பில் 56 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. வங்கிகளின் மூலம் நேரடி கடன் பெற்று தொழில் செய்ய முடியாத சூழ்நிலையில் இருந்த எங்கள் குழுக்களின் உறுப்பினர்கள், வெளி நபர்களிடம் தண்டல் மற்றும் கந்து வட்டிக்கு கடன் பெற்று தொழில் செய்து வந்தனர். இந்நிலையில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் NABFINS நிதியத்துடன் எங்கள் கூட்டமைப்பு வணிக மேம்பாட்டு தொடர்பாளராக (Business Development and Correspondents) செயல்படத் தொடங்கியது. இதன் காரணமாக எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள 40 குழுக்களைச் சேர்ந்த 542 உறுப்பினர்களுக்கு NABFINS நிதியத்தின் மூலம் குறைந்த அளவிலான வட்டி விகிதத்துடன் தொழில் செய்ய ஒரு கோடி ரூபாய் கடன் பெற்று தந்தோம்.

கடனாகப் பெற்ற தொகை மூலம் புடவை வியாபாரம், பால் விற்பனை, விவசாயம் செய்தல், பெட்டிக்கடை போன்ற பல தொழில்களை குழு உறுப்பினர்கள் செய்து வருகின்றனர். எங்கள் குழு உறுப்பினர்களின் தொழிலை மேம்படுத்தியதோடு மட்டுமல்லாமல் எங்கள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வணிக மேம்பாட்டு தொடர்பாளராக செயல்பட்டதன் மூலம் ரூ. 1,00,580/– ஐ சேவைக் கட்டணம ாக NABFINS நிதியத்திடம் பெற்றுள்ளோம். கந்து வட்டிக்கு வெளிநபர்களிடம் கடன் பெற்று அதிகப்படியான வட்டியில் தவித்த எங்கள் குழுக்களின் உறுப்பினர்களை கடன் தொல்லையில் இருந்து மீட்டெடுத்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு எங்கள் கூட்டமைப்பின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறினார். ■

ஏழைகளின் துயர் துடைக்கும் காப்பீடு

எதிர்பாராமல் நிகழும் இடர்களினால் ஏற்படும் இழப்பீடுகளை ஈடு செய்து துயரை குறைக்கக் கூடியது காப்பீடு ஆகும். அவ்வாறு காப்பீட்டில் பிரிமியம் செலுத்தி பாலிசிதாரராகும் உறுப்பினர்கள் இழப்பீடு பெற தகுதியுடையவராவர்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 109 ஊராட்சி களில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் காப்பீடு திட்டம் பெரும்பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தை பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு 'ஒரு நாள் காப்பீட்டு கல்வி பயிற்சி' அளிக்கப்பட்டது. UIIC, LIC நிறுவனங்கள் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்துடன் இணைந்து பல நுண்காப்பீடு திட்டங்களை ஏழை, மிகவும் ஏழை மக்களுக்கு குறைந்த பிரிமீயத்தில் அறிமுகப் படுத்தியுள்ளது. இக்காப்பீடு திட்டத்தின் வாயிலாக மக்கள் பல வகையில் பயனடைந்து வருகின்றனர். கூட்டமைப்பு நிர்வாகிகள் முகவர்களாக செயல்பட்டு காப்பீடு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

காப்பீடு திட்டத்தில் பயனடைந்த திருமதி ரஞ்சிதம் கூறுகையில்

என் பெயர் ரஞ்சிதம், நான் விழுப்புரம் மாவட்டம் பொம்மையார்பாளையத்தில் வசித்து வருகிறேன். நானும் என் கணவரும் தனிநபர் விபத்து காப்பீட்டில் ரூ. 25/– பிரீமியம் செலுத்தி இணைந்தோம். எதிர்பாராமல் ஒரு சாலை விபத்தில் என் கணவர் திரு குப்புசாமி அவர்கள் காலமானார். UIIC காப்பீடு நிறுவனத்தில் விபத்து காப்பீடு செய்ததினால் விபத்து இழப்பீடு தொகையாக ரூ. 50 ஆயிரம் பெற்றேன். இந்த இழப்பீடு தொகையை பெற்றுக் கொண்டதால் என் வாழ்வாதாரத்திற்கு பயனுள்ளதாகவும், ஆறுதலாகவும் உள்ளது. இந்த காப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்திய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கும், UIIC நிறுவனத்திற்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டத்தில் காப்பீடு திட்டத்தின் மூலம் பயனடைந்த திருமதி அபிராமி கூறுகையில்,

என் பெயர் அபிராமி, நான் கடலூர் மாவட்டம், சிலம்பிமங்கலம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். மேலும் கொத்தட்டை ஊராட்சியில் காப்பீடு குறித்த பயிற்சி பெற்றேன். ஜீவன் மங்கள் காப்பீடு (சேமிப்பு) பாலிசியில் எனது கணவர் பெயரில் ரூ. 143/– பிரிமியமாக செலுத்தி வந்தேன். எதிர்பாராத விதமாக திடீரென எனது கணவர் இறந்து விட்டார். எனது கணவர் பெயரில் காப்பீடு செய்த ஜீவன் மங்கள் பாலிசியில் LIC மூலம் இழப்பீடாக ரூபாய் 10,000/– கிடைத்த போது, எனக்கு கண்ணீர் வந்தது. 'ஜீவன் போன பிறகும் ஜீவன் மங்கள் உதவியது'. இந்தத் தொகையினை என் வாழ்வாதாரத்திற்காக சிறிய பெட்டிக் கடை தொடங்க உள்ளேன். இதற்கு காரணமாக இருந்த IFAD Assisted PTSLP–க்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் படிக்கும் ஒவ்வொரு மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் காப்பீடு செய்து கொள்வதுடன், தங்கள் குடும்பத்தினரையும் காப்பீடு திட்டத்தில் சேர்த்து பயன் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ■

முற்றக் கச்சேரி

பகுதி - 11

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் குறித்து சுபா, செல்லாயி, பார்வதி மற்றும் வாணி ஆகியோர் விவாதிக்கிறார்கள்.

சுபா: ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தை பத்தி இன்னைக்கு பேசலாம். சுகாதார வளாகம் பற்றி உங்களுக்குத் தெரியும் தானே?

வேணி: கொஞ்ச நாளைக்கு முன்னாடி வரை அந்த சுகாதார வளாகம் பராமரிப்பில்லாம இருந்துச்சு.

சுபா: நம்ம முதலமைச்சர் அம்மா அவர்கள், நம்ம மாநிலத்துல இருக்கிற அனைத்து சுகாதார வளாகத்தையும் சீரமைச்சு மக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில மாத்திட உத்தரவு போட்டாங்க. அந்த உத்தரவுபடி அனைத்து ஊராட்சியிலும் சுகாதார வளாகங்களை புதுப்பிச்சு இப்ப அந்த சுகாதார வளாகங்களை மக்கள் பயன்படுத்திட்டு இருக்காங்க.

செல்லாயி : சுகாதார வளாகத்தால என்ன பயன்?

சுபா: என்ன இப்படி கேட்டுட்ட செல்லாயி. வீடுகள்ள கழிப்பறை வசதி இல்லாதவங்க சாலை ஓரங்களையும், புதர்களையும், காட்டுப் பகுதிகளையும் கழிப்பறையா பயன்படுத்தி வந்தாங்க. இதனால சுற்றுப்புறச் சூழல் கெட்டுப் போய், சுகாதாரம் இல்லாத நிலை ஏற்பட்டது.

செல்லாயி: அம்மாடி... இவ்வளவு பிரச்சனை இருந்ததா?

சுபா: ஆமா. அதுமட்டுமில்லாம திறந்தவெளிய கழிப்பறையா பயன்படுத்துறதால பெண்களுக்கும் பல பிரச்சனைகள் ஏற்பட்டது. பகல் நேரம், மழை காலம், இருட்டு, விஷப்பூச்சிகள் போன்ற பல பிரச்சனைகளை பெண்கள் சமாளிக்க வேண்டியிருந்தது.

செல்லாயி: சுகாதார வளாகம் வந்ததால இந்த பிரச்சனையெல்லாம் தீர்ந்து போச்சா?

சுபா: ஆமா. வீடுகளில் கழிப்பறை வசதி இல்லாதவங்க, சுகாதார வளாகத்தை பயன்படுத்திட்டு வராங்க. இதனால பெண்களுக்கு நிம்மதியும், உடல் நல பாதிப்புகளில் இருந்து விடுதலையும் கிடைச்சிருக்கு.

பார்வதி: சுகாதார வளாகத்துல என்னென்ன வசதிகள் இருக்குது?

சுபா: மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், குழந்தைகள், பெண்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ப இந்த வளாகத்துல வசதிகள் இருக்குது. குளிக்கவும், துணிகள் துவைக்கவும், பெண்கள் பயன்படுத்திய சானிடரி நாப்கின்களை எரிக்கவும் வசதிகள் உள்ளது. சில இடத்துல சாண எரிவாயு அமைப்பை ஏற்படுத்தி சமுதாய சமையல் கூடங்களையும் ஏற்படுத்தி இருக்காங்க.

வாணி: அங்க கூட ஒரு அம்மா தன்னோட குழந்தையோட பிறந்த நாளுக்கு அந்த சமையல் கூடத்துல பாயாசம் காய்ச்சினாங்களே.

பார்வதி: சுகாதார வளாகங்கள யார் பராமரிக்கிறாங்க?

சுபா: ஆமா. சுகாதார வளாகங்கள் உதவிக் குழுக்கள் மூலமா பராமரிக்கப்படுது. வளாகத்தை பயன்படுத்துகிறவங்ககிட்டு மாதந்தோறும் குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கப்படுது. வளாகத்துல பயன்படுத்தும் தண்ணீரைக் கொண்டு வளாகத்தை சுற்றிலும் மரம், செடிகள் வளர்க்கப்படுது.

வாணி: சுகாதார வளாகத்துல இவ்வளவு வசதிகள் இருக்கா...

சுபா: நம்ம மாநிலத்துல சிறப்பாக செயல்பட்டு வரும் சுகாதார வளாகங்களை பார்த்து பிற மாநில அரசுகளும் தங்கள் மாநிலங்களிலும் சுகாதார வளாகங்களை அமைக்க முயற்சி எடுத்துட்டு இருக்காங்க. சமீபத்துல கூட குஜராத்துல இருந்து ஒரு குழுவினர் நம்ம ஊருக்கு வந்து சுகாதார வளாகங்களின் செயல்பாட்டை பார்வையிட்டாங்க. அவைகளின் செயல்பாடுகள் குறித்து பல விஷயங்களை கேட்டுட்டு போனாங்க.

வாணி: சுகாதார வளாகத்தை சீரமைச்சு தந்த நம்ம முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டத்திற்கும் நன்றி சொல்லணும்... சரியா?

சுபா: ரொம்ப சரி... நான் வரட்டுமா? அடுத்த முறை வேற விஷயம் குறித்து பேசுவோம்.

(சுபா விடைபெற்று செல்ல... செல்லாயி, வாணி மற்றும் பார்வதி ஆகியோர் வீட்டிற்கு செல்கின்றனர்.) ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை கைகள், சக்கர நாற்காலி, கிராம வறுமை ஒழிப்பு சங்க மாற்றுத்திறனாளி ஊக்குனர்களுக்கு மதிப்பிலான ஊனத்தை மதிப்பிடும் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

பக்கம்...28

பரண் மேல் ஆடு வளர்ப்பு மூலம் 100 ஆடுகள் வளர்த்தால், ஒரு ஆட்டின் மூலம் ஆண்டுக்கு 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு. இம்முறையில் நோய்த் தாக்குதலும் குறைவாக இருக்கும்.

பக்கம்...29

கணினி கணக்கியல் பயிற்சி, வங்கியாளர் செயல்பாடுகள், பால் கொள்முதல் பூச்சரம், வறுமை ஒழிப்பு சங்கங்கள், கூட்டமைப்பு மற்றும் மாவட்ட மகமையின் செயல்பாடுகள் ஆகியவை பார்வையிடப்பட்டது.

பக்கம்...32

பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பு

பரண் மேல் ஆடு! கை மேல் காசு!

மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் தின விழா கொண்டாட்டம்

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நாமக்கல் செல்வம் கலைக்கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டிகளில் ஏராள மான மாற்றுத் திறனாளிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு தமிழக தொழிற்துறை அமைச்சர் திரு பி. தங்கமணி அவர்கள் பரிசுகளை வழங்கினார். நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வ. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், முன்னிலை வகித்தார். மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. அ.பிலிப்ஸ் இளையராஜா, உதவித் திட்ட மேலாளர் திரு எஸ். சரவணகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள், வாய்ப்பு கிடைத்தால் சாதனைகள் பலவற்றை படைப்பார்கள் என்பதை அனைவருக்கும் உணர்த்தியுள்ளனர்.

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டத்தில் 07.01.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. தரேஸ் அஹ்மத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் தின விழாவில், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு இரா. இளம்பை. தமிழ்ச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு எம்.ஏ.சுப்பரமணியன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி சகுந்தலா கோவிந்தன், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு தி. மனோகர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் ப. சுதாதேவி உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், அரசு நலத்திட்ட உதவிகளும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. நா. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு செயற்கை கைகள், சக்கர நாற்காலி, 18 நபர்களுக்கு வங்கிக் கடன் ரூ. 7.20 இலட்சம், 122 கிராம வறுமை ஒழிப்பு சங்க மாற்றுத்திறனாளி ஊக்குனர்களுக்கு ரூ. 3.41 இலட்சம் மதிப்பிலான ஊனத்தை மதிப்பிடும் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டது. மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பா. மணிராஜ், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. ஜோசப் ரவி, தாட்கோ பொது மேலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கரூர்

கரூர் மாவட்டம், தாந்தோணி ஒன்றியம், ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சியில் வசித்து வரும் சண்முகம், பிறக்கும்போதே மாற்றுத்திறன் உள்ளவராக பிறந்ததால், மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தார். இத்தருணத்தில் இவர் வசிக்கும் கிராமத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படத் துவங்கியது. கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் உறுப்பினரான சண்முகத்திற்கு, தொழில் கடனாக ரூபாய் 10,000/- கடன் வழங்கப்பட்டது. அந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு, மண்பானைகளை தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கிய சண்முகம், இன்று மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வறுமையின் பிடியில் இருந்து மீண்டுள்ளார். ■

பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பு

பரண் மேல் ஆடு! கை மேல் காசு!

சிறிய இடத்தில் ஆடுகளை வளர்க்கும் வகையில் 'பரண் மேல் ஆடுவளர்ப்பு முறை' இப்பொழுது பிரபலம் ஆகி உள்ளது

தமிழகத்தின் பொருளாதார வளத்திற்கு கால்நடை செல்வங்கள் பெரிய பங்களிப்பை செய்து வருகின்றன. இந்த வரிசையில் ஆடு வளர்ப்பு நல்ல இலாபம் தரும் தொழிலாக இருக்கிறது. படித்த இளைஞர்கள் தற்போது இந்த தொழிலில் இறங்கி வருவது அதிகரித்துள்ளது. 'ஆடு மாடு மேய்க்கத்தான் இலாயக்கு' என்று கூறியவர்கள் வாயடைத்து வியப்புடன் பார்க்கும் அளவுக்கு நவீன முறை கால்நடை வளர்ப்பு தொழில் நுட்பங்கள் பிரபலமாக உள்ளது.

ஆடுகளை தரையில் வளர்க்காமல் தரையிலிருந்து 4 அடி உயரத்தில் கிடைமட்டமாக மரச் சட்டங்களை 4க்கு 3 அடி அளவில் 1 விரல் இடைவெளியில் வரிசையாக அடுக்கி கட்டி அமைப்பது தான் பரண் அமைப்பு. சுமார் 100 ஆடுகள் வளர்க்க 50 அடி நீளம், 22 அடி அகலம் உடைய கொட்டகை அவசியம். இந்தக் கொட்டகையில் ஆடு ஈனும் இளங்குட்டிகளை அடைக்கவும், அதனில் ஒரு பகுதி 22க்கு 15 இஞ்ச் அளவில் தடுப்பு அமைத்தல் வேண்டும். குட்டிகள் 3 மாதங்கள் வரை தாயிடம் பால் குடிப்பதால் அவை தாயின் பார்வைக்கு அப்பால் இருக்க கொட்டில் முழுவதும் அடைத்து இருத்தல் வேண்டும்.

தீவன பராமரிப்பு

பரண் மேல் வெள்ளாடு வளர்ப்பு முறையின் வெற்றிக்கு பசுந்தீவனம் முக்கிய பங்கு வகிக்கிறது. தீவனப் பற்றாக் குறையினால் வெள்ளாடு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபட முன்வருவதில்லை. எனவே 100 ஆடுகளை வளர்க்க குறைந்தபட்சம் 4 ஏக்கர் நிலத்தை பசுந்தீவனத்திற்கு என ஒதுக்க வேண்டும். வாரம் இரண்டு முறை தண்ணீர் பாய்ச்சக் கூடிய விவசாய நிலமாக இருத்தல் வேண்டும். தென்னையில் ஊடுபயிராக பசுந்தீவனம் வளர்க்க அதன் இடைவெளிக்கு ஏற்ப 6 முதல் 8 ஏக்கர் நிலம் அவசியம்.

பசுந்தீவன வகைகள்

கோ–3, கோ–4, வேலிமசால், குதிரை மசால் வகைகள், தீவன சோள புல் வகைகள், அகத்தி, சித்தகத்தி, சவுண்டல் ரகங்களை வளர்க்கலாம். 50 சென்ட் நிலத்தில் ஒவ்வொரு வகை தீவனத்தையும் வளர்க்கலாம். பண்ணை அமைப்பதற்கு முன் பசுந்தீவனங்களை பயிரிட்டு விட வேண்டும். ஏனென்றால், முதல் அறுவடை 60 முதல் 70 நாட்கள் குறைந்தபட்சமும், 80 முதல் 90 நாட்கள் அதிகபட்சமாகவும் தேவைப்படும்.

அடர் தீவனம்

3 மாதம் முதல் 6 மாத குட்டிகளுக்கு 25 கிராம் முதல் 35 கிராம் தீவனமும், 6 மாதம் முதல் 12 மாதம் வரையில் 50 முதல் 100 கிராம் வரை, சினைப்பருவத்தில் 175 கிராம், ஈன்ற ஆடுகளுக்கு 200 முதல் 250 கிராம், கிடாக்களுக்கு 300 கிராம் என்ற அளவிலும் அளிக்க வேண்டும்.

அடர் தீவனத்தின் கலவை விகிதம் (100 கிலோவிற்கு) கீழ்கண்ட அளவில் இருக்க வேண்டும்.

மக்காச்சோளம், கம்பு 35 முதல் 40 கிலோ, ராகி மற்றும் இதர தானியங்கள் 10 கிலோ, கடலைப் புண்ணாக்கு 20 கிலோ, கோதுமை தவிடு, அரிசி தவிடு 10 கிலோ, துவரம் பொட்டு, பாசிப் பொட்டு 17 கிலோ, தாது உப்பு 2 கிலோ, சாதாரண உப்பு 1 கிலோ என்ற அளவில் 100 கிலோ அடர் தீவனத்தின் பகுதிகளாக இருக்க வேண்டும்.

பரண் மேல் ஆடு வளர்ப்பு மூலம் நோய் தாக்கும் வாய்ப்பு குறைவு. இனப் பெருக்கத்தில் குட்டிகளின் இறப்பு விகிதம் குறைவு. குறைந்தபட்சம் 100 ஆடுகள் வளர்த்தால், ஒரு ஆட்டின் மூலம் ஆண்டுக்கு 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்க வாய்ப்புண்டு.

நோய் பராமரிப்பு

கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி ஆண்டுக்கு 4 முறை தடுப்பூசிகள் போட வேண்டும். குறிப்பாக, மார்ச், ஏப்ரல் மாதங்களில் கால், வாய் நோய்க்கான தடுப்பூசி, ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் பி பி ஆர் தடுப்பூசி, ஆகஸ்ட் மாதத்தில் கால், வாய் நோய் தடுப்பூசி, அக்டோபர் மாதத்தில் துள்ளுமாரி தடுப்பூசி ஆகியவற்றை போட வேண்டும். குடற்புழு நீக்க மருந்துகளை குட்டிகள் பிறந்த 30வது நாள், 2, 3, 4, 6, 9வது மாதங்களில் போட வேண்டும். ■

மனநலம் பாதித்தவர்களுக்கு வீடு தேடி சிகிச்சை

வறுமையற்ற தமிழகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்விலும் மலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், 'புதுவாழ்வு மனநலம்' என்ற திட்டத்தை புதுவாழ்வு திட்டம் வாயிலாக செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தின்படி மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் வீடு தேடிச் சென்று அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

முதல்கட்டமாக வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஒன்றியத்தில் முன்மாதிரியாக இத்திட்டத்தை செயல்படுத்த ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மனநலம் பாதிக்கப்பட்டோருக்கு கவுன்சிலிங் தருவது, சிகிச்சை அளிப்பது போன்றவை செயல்களுக்காக தனியார் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்டோரின் வீடு தேடிச் சென்று அவர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்க சமூக மாற்றுத் திறனாளி ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இடையில் மன நலம் பாதிக்கப் பட்டவர்கள் மட்டுமின்றி, பிறவியிலேயே மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும் தேவையான சிகிச்சைகள் அளிக்க இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

ஓரளவிற்கு மன நலம் தெளிந்த பிறகு. அவர்களுக்கு கைவினைப் பொருட்கள் தயாரிப்பது உள்ளிட்ட சில தொழிற்பயிற்சிகளும் அளிக்கப்படும். போதிய பயிற்சிக்குப் பின்னர் சுய தொழில் தொடங்குவதற்கு வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரப்படும். ■

கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, பாரம்பரிய முறைப்படி கும்மிப் பாட்டுகள் பாடியும், கிராமப்புற நடனங்கள் ஆடியும் சமத்துவப் பொங்கல் விழாவினை கொண்டாடி மகிழ்ந்தனர்.

சமத்துவப் பொங்கல் விழா

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், சித்தன்னவாசல் ஊராட்சியில். புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்டம் மற்றும் சித்தன்னவாசலில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் சார்பில் சமத்துவப் பொங்கல் விழா 11.01.2014 அன்று நடைபெற்றது. மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. செ. வசுமதி தலைமையில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவினை சித்தன்னவாசல் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் தலைவரும், ஊராட்சி தலைவருமான திருமதி மு. பாண்டியம்மாள் தொடங்கி வைத்தார்

இந்த விழாவில் புதுவாழ்வு திட்ட பணியாளர்கள், சித்தன்னவாசல் கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, பாரம்பரிய முறைப்படி கும்மிப் பாட்டுகள் பாடியும், கிராமப்புற நடனங்கள் ஆடியும் சமத்துவப் பொங்கல் விழாவினை கொண்டாடி மகிழ்ந்தனர். ■

பால் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஒன்றியம், ஏர்த்தாங்கல் மற்றும் நெல்லூர்பேட்டை ஊராட்சிகளில் புதுவாழ்வு திட்டம் மூலம் பால் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டுள்ளன. மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு நாராயணன் பால் கொள்முதல் நிலையங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் திரு. மகேந்திரன், திருமதி சரஸ்வதி பிச்சாண்டி, உதவித்திட்ட மேலாளர் திரு ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

வண்ண வண்ண மணிகளால் வளமானது வாழ்க்கை

திருமதி. ஜெயந்தி – செல்வி. சத்தியா,
பால்மணி பூச்சரம்,
காந்தி நகர், தொழுதூர்,
கடலூர் மாவட்டம்.
செல்பேசி 85269 50778

ஊரு ஊருராகச் சென்று ஊசி மணி பாசி மணி என்று கூவி விற்பனை செய்தவர்கள், இன்று வெளிநாடுகளுக்கே தங்களின் தயாரிப்பு பொருட்களை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ளனர். அரசின் ஆதரவும், புதுவாழ்வு திட்டம் தந்த ஊக்கமும் இவர்களின் வாழ்வில் புதிய பாதையைக் காட்டியுள்ளன. கேள்விக் குறியாய் இருந்த இவர்களின் வாழ்வு இன்று ஆச்சரியக் குறியாய் மாறியது எவ்வாறு? என்பதை தெரிந்து கொள்வோம் வாருங்கள்.

கடலூர் மாவட்டம், தொழுதூர் காந்தி நகரைச் சேர்ந்த ஜெயந்தி மற்றும் சத்யா இருவரும் ஒருசேர தங்களின் வெற்றிக் கதையை சொல்கின்றனர்.

‘நாங்கள் நரிக்குறவர்கள் எனப்படும் பழங்குடியினத்தவர்கள். எங்களுக்கு நிரந்தரமான இருப்பிடமோ நிலையான வருமானமோ கிடையாது. எங்க இனத்தைச் சேர்ந்தவங்க மணி மாலைகளை அழகா செய்வாங்க. ஆனா அந்த மாலைகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்து குறைவான வருவாய் பெறுவாங்க. எங்களுடைய கஷ்ட காலத்திற்கு விடிவு வராதா என்று ஏங்கிக் கிடந்தபோதுதான், புதுவாழ்வு திட்டம் எங்களுக்கு புதிய வாழ்வை தந்தது.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலமா சுய உதவிக் குழுக்கள ஆரம்பிச்சு அதுல எங்களை உறுப்பினரா சேர்த்து, எங்களுக்கு மணிமாலைகள் கட்டுதல், டிசைன் மாலைகள் தயாரித்தல் போன்ற பயிற்சிகளைத் தந்தாங்க. பயிற்சிப் பின்னர், வங்கியில் கடன் வாங்கிக் கொடுத்து, சுயமா தொழில் செய்ய வாய்ப்பை ஏற்படுத்தி தந்தாங்க. எங்க பகுதியில ஒரே தொழில் செய்யும் குழுக்களை இணைச்சு பூச்சரமா செயல்பட வைச்சாங்க. நாங்க பால்மணி பூச்சாரம் என்று பெயரில் செயல்பட ஆரம்பிச்சோம்.

கிரிஸ்டல் மணிகள், பல்வேறு நிற மணிகளைக் கொண்டு அழகிய மாலைகள் போன்றவற்றை கைகளினாலேயே தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பிச்சோம். எங்களோட பொருட்கள் தரமா இருப்பதால நிறைய பேர் வாங்க ஆரம்பிச்சாங்க. தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களோட வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் எங்க பொருட்களை விற்பனை செய்யவும் புதுவாழ்வு திட்டம் வாய்ப்பு பெற்றுத் தருது. வெளி மாவட்டங்கள் மட்டுமல்லாம வெளி மாநில வியாபாரிங்களும் எங்க பொருட்கள வாங்கிட்டு போறாங்க. இதனால எங்களுக்கு கணிசமான வருமானம் கிடைக்குது. இப்ப நாங்க எங்க பொருட்கள வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய புதுவாழ்வு திட்டம் மூலமா முயற்சி செஞ்சிட்டு இருக்கோம்.

ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்த நாங்கள் பொருளாதார முன்னேற்றம் அடையவும் காரணமாக இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றுக்கு எங்களோட நன்றியை தெரிவிச்சிக்கிறோம்’ என்று பெருமிதத்துடன் கூறுகின்றனர் ஜெயந்தியும் சத்யாவும். ■

> எங்களோட பொருட்கள் தரமா இருப்பதால நிறைய பேர் வாங்க ஆரம்பிச்சாங்க. எங்களோட தயாரிப்பு பொருட்களை நியாயமான விலையில விற்பனை செய்ய ஆரம்பிச்சோம். இதனால எங்களுக்கு வருமானமும் அதிகமா கிடைக்க ஆரம்பிச்சது.

ஓட்டுனர் மற்றும் செவிலியர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் 108 ஆம்புலன்ஸ் சேவைக்கான டிரைவர் மற்றும் மருத்துவ செவிலியர்களுக்காக வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. புதுவாழ்வு திட்டம் சார்பில் சங்கரன் கோவிலில் 07.01.2014 அன்று நடைபெற்ற இம்முகாமில் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். மூன்று கட்ட தேர்வுக்குப் பின்னர் 108 ஆம்புலன்ஸ் டிரைவர் பணிக்கு 16 நபர்களும், மருத்துவ செவிலியர் பணிக்கு 29 நபர்களும் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் திருநெல்வேலி மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ச.கி. சம்பத்குமார் அவர்கள் பணி நியமன ஆணையினை வழங்கினார்கள். பணி உத்தரவு பெற்ற அனைவரும் புதுவாழ்வு திட்டத்திற்கு தங்களின் நன்றியை தெரிவித்துக் கொண்டனர். ■

கணினி கணக்கியல் பயிற்சி, வங்கியாளர் செயல்பாடுகள், பால் கொள்முதல் பூச்சரம், வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மாவட்ட மகமையின் செயல்பாடுகள் ஆகியவை பார்வையிடப்பட்டது.

வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு ரதம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் இதுவரை 14,777 இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக இளைஞர்களுக்கிடையே தொழில் திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'விழிப்புணர்வு ரதத்தினை' நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் 27.12.2013 அன்று துவக்கி வைத்தார். இந்த ரதத்தில் இளைஞர்களுக்கு தரப்படும் தொழிற்பயிற்சிகள் குறித்த விபரங்கள் இடம் பெற்றுள்ளன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு ம. ஜெயப்பிரகாஷ், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு செந்தில்குமார், புதுவாழ்வு திட்ட உதவித் திட்ட மேலாளர்கள் திரு செல்வம், திருமதி கலைவாணி மற்றும் பால்வள ஆலோசகர் திரு ஜெகன்நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் மூலம் மாவட்டந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. இம்முகாமில் ஏராளமான நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனத்திற்கு தேவையான நபர்களை தேர்ந்தெடுக்கின்றன

புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்க முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. சாந்தி குமாரி அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட 18.12.2013 அன்று வருகை தந்தார். கணினி கணக்கியல் பயிற்சி, வங்கியாளர் செயல்பாடுகள், பால் கொள்முதல் பூச்சரம், வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மாவட்ட மகமையின் செயல்பாடுகளை பார்வையிட்டு, அவைகளின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திருமதி. ஆர். வி. ஷஜீவனா, மாநில MIS தகவல் மேலாண்மை வல்லுநர் (MIS) திரு. ப. சிவலிங்கம் மற்றும் மாவட்ட திட்ட மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (76,700 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

- வீட்டில் கழிவறை இல்லாததால், திறந்தவெளிக்கு மலம் கழிக்க பெண்களை அனுப்புவது எவ்வளவு கேவலமான விஷயம்?
- நீங்கள் ஆசைஆசையாய் பெத்து வளர்த்த மகளை கட்டிக் கொடுத்து இப்படி தினமும் அவளை அவமானப்படுத்தலாமா?
- கழிவறை இல்லாத வீட்டில் சம்பந்தம் பேச மாட்டேன் என சபதமெடுங்கள். ஏனெனில்

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு கவுரவம்.

unicef
unite for children

வெளியில மலம் போனா சீச்சீ சொல்லப்பா!

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 22.01.2014

இந்தியன் வங்கியின் வேளாண் கடன் திட்டங்கள்

உற்பத்திக் கடன்
(பயிர் உற்பத்தியைப் பெருக்க)

- உழவர் கடன் அட்டை திட்டம்
- தங்க நகை ஈட்டின் பேரில் குறுகிய கால பயிர்க்கடன்

சிறப்பு அம்சங்கள்

- ரூ.3 லட்சம் வரை ஆண்டுக்கு 7% வட்டியில் மத்திய அரசின் வட்டி பகிர்வுத் திட்ட உதவியுடன் வழங்கப்படும் பயிர்க்ககடன்.
- மின்னணு வங்கிச் சேவையுடன் 5 ஆண்டுகளுக்குப் பயன்படும் வண்ணம் வழங்கப்படும் உழவர் கடன் அட்டை.
- இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் பருவந்தோறும் அறிவித்துள்ள பயிர்களுக்கு அறிவிக்கபட்டுள்ள பகுதிகளில் பயிர்க்காப்பீடு

முதலீட்டுக் கடன்
(பண்ணைச் சொத்துக்களை உருவாக்க)

- பண்ணை இயந்திரங்கள்
- சிறு பாசனம் / நில மேம்பாடு
- தோட்டக்கலை / மலைப் பயிர்கள்
- அறுவடைக்குப் பின் செய்முறை
- வேளாண் சார் தொழில்கள்
- வேளாண் விளைபொருள் சேமிப்புக்கூடங்கள்

பயன் பெறுவோர்

- குறு விவசாயிகள் / சிறு விவசாயிகள் / பெரு விவசாயிகள்
- குத்தகை விவசாயிகள் / பங்கு சாகுபடி விவசாயிகள்
- சுய உதவிக் குழுக்கள் / விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள்
- நிறுவனங்கள்

கார்பரேட் அலுவலகம்:
254–260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி